நூலகம்

Binding
452
CONNEMARA PUBLIC LIB
MADRAS

சானா மாநில பல்கலைக் கழக கல்லூரி நூலகம்
டெம்பே, அமெரிக்கா.

புத்தகப் பணி ஏடு



தரமான, உறுதியுள்ள, உழைக்கக் கூடிய

மாட்டுத் தொழுவங்கள்

கட்ட

SANKAR IC CEMENT

சங்கர் சிமெண்ட்

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட். சென்னை-2 தொழிற்சாலைகள்: சங்கர் நகர், சங்கரி.

Criterion ICT 2223 TM

நூலகம்

ஆசிரியர் :
குயிலன்

மலர் 4 இதழ் 1

செப்டம்பர் 1969

ஆண்டுச் சந்தா ரூபாய் ஒன்பது

MADRAS

கார்ட்டூன்

நூலகத்திற்கு நான்கு வயது
தலையங்கம்

நூலகப் பணியின் அடிப்படையில் நூலக இயல்
டாக்டர்.
எஸ். ஆர். ரங்கநாதன்

புதுமை பொலிவுறும் அமெரிக்கக் கல்லூரி நூலகங்கள்
''கருடாழ்வார்''

பத்மஸ்ரீ டாக்டர் வி. கே. கோகக்
மணவை முஸ்தபா

ஜெர்மன் நூலகங்களின் வரலாறு
டாக்டர் எஸ். கிரீசன்

நடை
ந. முத்துசாமி

நூலிழப்பு ஏன் ஏற்படுகிறது?
வே. சந்திரசேகரன்

அலுவலகம்:
14, தணிகாசலம் செட்டி ரோடு,
தியாகராயநகர்,
சென்னை-17

தொலைபேசி எண் :
441970

NOOLAGAM
Library & Book Trade Monthly

Published by :
BIBLIOPOLE

14, Thanikachalam Chetty Road,
Madras-17
Annual Subscription Rs. 9.

211, N66
31K9

படிப் படி ஏறிப் படி !



நூலகத்திற்கு நான்கு வயது

"மனித நாகரிக வளர்ச்சியின் பதிவு நிலையம் நூலகம். நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் சீரிய கருத்துக்களை மக்கள் உள்ளத்திலே வளர்த்துப் பயிர் செய்வதற்கு "நாற்றங்கால்களாக" விளங்குவது நூலகம. சிந்தனை வித்துக்களின் சேமிப்புக் கிடங்கு நூலகம்.

"மக்களுக்குப் 'பொது அறிவுக் கல்வி'யை ஊட்டுவதற்கு எல்லா இடங்களிலும் நூலகங்களை நிறுவும் முயற்சியை உலக அரசுகள் அனைத்தும் முனைந்து நின்று ஓர் இயக்கமாகவே நடத்தி வருகின்றன. இந்த இயக்கத்தில் பாரதமும் — குறிப்பாகத் தமிழகமும் முன்னேறி வருகிறது".

நூலகம் ஆரம்ப இதழில் கூறிய மேற்கண்ட வாசகங்களை மீண்டும் நினைவுபடுத்துகிறோம். நூலகம் பல இன்னல்களைக் கடந்து நூலக இயக்கத்திற்கு தன்னாலியன்ற பணியை கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து செய்து வந்திருக்கிறது. ஆர்வத்துடன் இதுவரை ஆதரவுதந்து ஒத்துழைத்த நூலக அறிஞர்களுக்கும், கல்லூரி, பொது நூலகங்களுக்கும், நூலகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், பதிப்பாளர்களுக்கும், வாசகர்களுக்கும், விளம்பரம் கொடுத்துதவிய வர்த்தகர்களுக்கும் 'நூலகம்' நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

நூலகம் நான்காவது ஆண்டில் வெற்றியுடன் காலடி எடுத்து வைத்திருக்கிறது. நூலக இபக்கம் மென்மேலும் வளர, இன்னும் பல சிறப்பு அம்சங்களுடன் தொடர்ந்து வெளிவரும். இதற்கு எல்லாரும் ஆதரவு தரவேண்டுகிறோம்.

PEARL BOOKS FOR YOUNG READERS

Nehru, the Man Rs. 3-00
by A. A. Ravoof

This book is about the human and humorous aspects of Nehru's personality. The portrait is built up largely in Nehru's own words from his letters, speeches and writings.

Mahatma Gandhi: A Story of Our Time and for All Time Rs. 5-00
by M. D. Japheth

A moving biography of Gandhi specially written with young people in mind. The illustrations also help to make this a memorable book.

A Golden Book of Quotations Rs. 2-00
compiled by Pl. Andiappan

Contains memorable utterances from humanity's gifted men and women, philosophers, saints, soldiers, novelists, politicians and reformers.

Six Great Modern Short Novels Rs. 2-75

The Dead by James Joyce. *Billy Budd* by Herman Melville. *Noon Wine* by Katherine Anne Porter. *The Overcoat* by Nikolay Gogol. *The Pilgrim Hawk* by Glenway Wescott and *The Bear* by William Faulkner.

You Said It - 3 Rs. 3-50
by Laxman

There is no substitute ever possible for this sort of impish humour and scintillant wit.

A Little World of Humour Rs. 3-00
by Mario

In Mario's little world of humour, everything is more than life-size, as your laughter will be when you enter it. Here you meet the new teenager, the bewildered tourist, pretentious artists and politicians, our dream-manufacturing advertising fraternity and designing women in all shapes and sizes.

Available at all leading bookshops or directly from

INDIA BOOK HOUSE

M.O. Dept., 249, DADABHAI NAOROJI ROAD, BOMBAY-1.

நூலகப் பணியின் அடிப்படையில் நூலக இயல்

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்

தமிழில் : பா. பெருமாள் B.A., B.Lib.Sc.,

இனிப் புத்தகப்பட்டியல் தயாரிக்கும் இரட்டை உத்திகளைக் காணலாம். நூலக இயலின் ஐந்து விதிகளின்படி, இன்றைய நூலகர்கள் பருவ ஏட்டுக் கட்டுரைகளையும், பத்திரிகைகளில் வரும் கட்டுரைகளையும் பட்டியல் விடுகிறார்கள். இவை பகுக்கப் பட்டதாக இல்லாவிட்டால், இத்தகைய பட்டியலினால் பயனேதும் இல்லை. ஒரு நல்ல பகுப்புப் பட்டி முறையினால்தான் பகுக்கப் பட்ட விவரப்பட்டியல் தயாரிக்க முடியும். 1925ல் சென்னைப் பல்கலைக்கழக நூலகம், தன் புத்தகங்களுக்கு மாற்று விபரப் பட்டியல் தயாரித்தபோது முறையான பகுப்புப் பட்டியல் முறை ஏதும் உலகில் இல்லை.

முதன் முதலாகச் சென்னையில் பகுப்புப் பட்டிமுறை உருவாயிற்று. அது 1934ல் பிரசுரிக்கப் பட்டது. பெர்விக் சேயர்ஸ் அதை பகுப்புப் பட்டிகளில் முதலாவது எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பொழுதும் அதுவே சிறந்த பகுப்புப் பட்டியாக விளங்குகிறது.

மாறுபட்டுவரும் நவீன இன்றையத் தேவைகளுக்கேற்ப பகுப்புப் பட்டியை தொடர்ந்து அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக நூலகப் பட்டியல் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. பகீரதன் முன்பாக நிர்ணயித்த பாதையை கங்கை கடைப்பிடித்ததைப் போல், இங்கும் கொள்கைமுறை வகுத்த வழியின்படியே பகுப்புப் பட்டியல் விதிகள் அனுசரிக்கப் படுகின்றன. நூலக இயலின் ஐந்துவிதிகளின் அம்சங்கள், தத்துவங்கள் ஆகியவற்றின் அடிப் படையிலேயே நூலகப் பகுப்புப்

பட்டியல் முறையும் உருவா னது.

சங்கிலிப்பட்டி

சங்கிலித் தொடர்போன்று அட்டவணைப்படுத்துதலை சங்கிலிப்பட்டி எனலாம். இத்துறையிலும் இந்தியாவே முன்னோடியாக, வழிகாட்டியாக உள்ளது. இது விஷயத்தலைப்புகளைப்பற்றியதாகும். இவை அப்போதைய தேவைக்காக மிக முக்கியத்துவம் அளிக்கப்படாமல் உருவாக்கப் பட்டது. 1934ல் சென்னைப் பல்கலைக் சழகநூலகம் விஷயத் தலைப்புகளை ஒரு முறையான விஞ்ஞான அடிப்படையில் அமைத்தது. இதனால் சங்கிலிப்பட்டி முறை உருவாயிற்று. இம்முறை இப்போது உலகின் பல பாகங்களில் வழக்கிலிருக்கிறது. பிரிட்டிஷ் தேசிய நூற்றொகை சங்கிலிப்பட்டி அடிப்படையில் தனது பட்டியை அமைத்துள்ளது.

மின் கதிரியக்கத்தின் பாதிப்பு !

நூலகஇயலின் ஐந்தாவது விதி இப்போது ஒரு கருத்தைப் போதிக்கிறது. ''நீ ஒரு வளரும் தன்மை கொண்டிருக்கிறாய். ஆகவே, உலகோடு ஒட்டி நீ வளரவேண்டும். உலகம் இப்போதுமின்கதிரியக்கக் காலத்தை எட்டியுள்ளது. வேலைகளை துரிதப்படுத்தவும், முடிந்தபோது மனித சக்தியை வீணாக்காமல் சேமிக்கவும் மின் கதிரியக்கத்தை நீ பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வாசகர்களுக்குத் தேவையான பத்திரங்களைத் தேடிக் கொடுக்க மின்கதிரியக்குனர்களை 'பத்திரம் கண்டு பிடிக்கும் இயந்திரம்' (Doc-finder) தயாரிக்குமாறு நீ பணிக்கவேண்டும். இந்தக் கருவியால் வேலை துரிதமாவதுடன், மற்ற நூலக விதிகள் விதித்துள்ள பிரத்தியேக மானுடத் தேவைகள் பாதிக்கப்படாதிருத்தலும் சாத்தியமாகும்'' என்று அது நூலகத்திடம் கூறுகிறது.

நூலக அமைப்பு மாநில நூலகத் திட்டம்

சில ஆண்டுகளுக்கு முன்வரை, ஒரு நகரம், ராஜ்யம் அல்லது தேசத்தில் நூலகம் அமைப்பது கட்டை விரலை அசைத்தவுடன் நடந்துவிடும் தன்மையதாயிருந்தது. இன்று, நூலக இயலின் ஐந்து விதிகள், நூலக அமைப்பை ஒரு விஞ்ஞான அடிப்படையில் செயல்பட வைத்துள்ளன. ஒரு நூலகத் திட்டத்தைப் பற்றி நாம் பேசுகிறோமேயன்றி, ஒரு நூலகம் என்று நாம் இப்பொழுதெல்லாம் பேசுவதில்லை. முதல் நான்கு விதிகள் தங்கள் தலைகள் மேகங்களுக்கு மேலும், தங்கள் கால்கள் தரைக்குமேலும் இருப்பது போன்று ஒரு மிதக்கும் நிலையில் உள்ளன. ஐந்தாவது விதி இவற்றைச் சீர்படுத்துவது போல் அமைந்துள்ளது. உலகில் ஒவ்வொன்றிற்கும் நிதி தேவை என்பதை அது உணர்ந்திருக்கிறது. நிதி கிடைப்பது அதுவும் நூலக் விஷயத்தில் கடினம் என்பதையும் அது உணர்ந்துள்ளது. ஆகவே மற்ற நான்கு விதிகளையும் ஒரு பொது அடிப்படையில் கொண்டு வரும் விதத்தில் அது அமைந்திருக்கிறது. இதனால் எளிதாக இந்த நான்கு விதிகளையும் அனுசரிப்பது சாத்தியமாகிறது. இன்று நமக்குத் தேவைப்படுவது நூலகத் திட்டங்களேயன்றி பரவலாகத் தனித்திருக்கும் நூலகங்கள் அல்ல. ஒரு

லட்சத்திற்குக் குறைவான ஜனத் தொகையுடைய எந்த நகரமும் நகர நூலகத் திட்டத்திற்கு ஏற்ற தல்ல என்பதை ஐந்து விதிகள் நமக்கு அறிவுறுத்துகின்றன. மாவட்டத்திலுள்ள இதர நகரங்கள், கிராமங்கள், தொகுதிகள் ஒன்று சேர்ந்து ஒரு மாவட்ட நூலகத் திட்டம் ஒன்றை அமைக்க வேண்டும். ஓரிடத்தில் ஐந்தாயிரத்துக்குக் குறைவான ஜனத் தொகை இருக்குமானல், அங்கு ஒரு தனி நூலகக் கட்டிடமும், நூலக ஊழியர்களையும் எற்படுத்துவது வீணன வேலையாகும். சிறிய இடங்கள் யாவற்றுக்கும் ஒரு இயங்கு நூலகம் (நடமாடும் நூலகம்) அப்போதைக்கப்போது சென்று பணி புரிவதே பொருத்தமான ஏற்பாடாகும். தமிழ்நாடு அரசு இந்த விஷயத்தை கவனிக்க வேண்டும். அப்பொழுதும், நூலக இயலின் எல்லா விதிகளையும் அனுசரிக்க முடியாது. நகர நூலகத் திட்டங்கள் யாவும், மாவட்ட நூலகத் திட்டங்களுடன் சேர்ந்து ராஜ்ய மத்திய நூலகத்துடன் ஒருமித்து செயல்பட்டு, அதை எப்போதாவது தேவைப்படும் புத்தகங்களின் சேமிப்பு நிலையமாக ஆக்க வேண்டும். ராஜ்யத்திலுள்ள மற்ற எல்லா நூலகங்களும் பணி நூலகங்களாகவே செயல்பட்டு, தேவைப்படாத புத்தகங்களை அவ்வப்பொழுது தள்ளுபடி செய்யவேண்டும். இதுவே ஐந்தாவது விதி கூறுவதாகும். ஆகவே, மாநில மத்திய நூலகம் ராஜ்ய முழுமைக்குமான (Dormitory) அதாவது, மாநிலப் பணி, நூலகங்களிலிருந்து உருக்குலையாமல் நல்ல நிலையிலுள்ள ஒவ்வொரு புத்தகத்திலும் ஒரு பிரதியாவது குறைந்தபட்சம் பெற்றுப் பாதுகாக்க வேண்டும். முக்கியமாக பணி நூலகங்கள் இனி உபயோகமில்லை என்று தள்ளுபடி செய்துள்ள அயல் நாட்டுப் புத்தகங்களைப் பெற்றுப் பாதுகாக்க வேண்டும் என்றும் ஐந்தாவது விதி கூறுகிறது. சட்ட சம்பந்தமான விவகாரங்களின் பொருட்டு ஒரு ராஜ்ய காப்பி ரைட் நூலகம் கூட இருக்கவேண்டும். இதற்குக் கலாசார ரீதியில் மாநில அறிவு சம்பந்தமான விஷயங்களைச் சேகரிக்கும் பணியும்இருக்கவேண்டும். காப்பி-ரைட் நூலகத்தின் எந்தப் புத்தகத்தையும், அது பிரசுரிக்கப் பட்டு இருபது ஆண்டு காலம் ஆகுமுன், பொது ஜனங்களுக்குக் கொடுக்கக்கூடாது. இதனல் நிறைந்த கிராக்கி ஏற்பட்டு புத்தகத்தின் பிரதி பாழ்படுவதைத் தடுக்கலாம். வாசகர்களுக்குத் தேவையான, புதிதாகப் பிரசுரிக்கப்படும் புத்தகத்தின் மற்ருெரு பிரதியை பிரசுரகர்த்தரிடமிருந்து மாநில மத்திய நூலகம் பெறுவதற்குச் சட்டம் வகை செய்யவேண்டும். நூலக இயலின் இரண்டாவது, மூன்ருவது விதிகள் இரண்டும் கூறுவது இதுவே யாகும்.

ஒரு மாநில நூலகத் திட்டத்தின் அமைப்பு இத்தகையதாகவே இருத்தல் வேண்டும்.

கோவி. மணிசேகரன்

கோ.வி. மணிசேகரனின் முதல் சிறுகதை 1947-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இவருடைய முதல் நாவல் ''அக்கினிக் கோபம்'' — 'அச்சின் கோபம்' அல்ல.

நூலகச் சட்டக் கோட்பாடின் அவசியம்

நூலகங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் எப்போதும் இருக்கவேண்டிய ஒன்ருகும். ஒரு நூலகத்தில் ஒரு புத்தகம் மாதக் கணக்கில் உபயோகமின்றிக் கிடக்க, மற்ற நூலகம் அதன் இன்னொரு பிரதியை வாசகர்களுக்காகப் பணம் செலவழித்து வாங்கும்படி நேருவது பெரிய தவருகும். நிதி நிர்வாகத்தில் இது மிக மோசமான நிலையைக் குறிக்கும். இது தேசியப் பொருளாதார ரீதியிலும் மோசமானதாகும். ஐந்தாவது விதியின் கருத்து அதுவே. இப்படி ஒருமித்து, ஒற்றுமையுடன் செயல்பட சட்ட ரீதியில் வகை செய்ய வேண்டியது அவசியம். ஆகவே தான், பொது நூலகங்களுக்கான சட்டங்கள் தேவை என்று வலியுறுத்தப்படுகிறது.

இந்த விஷயத்திலும், பழைய சென்னைக் கூட்டு மாநிலம் ஒரு நூலக சரித்திரத்தையே உண்டாக்கியுள்ளது. பொது நூலகச் சட்டத்தை முதன் முறையாகக் கொண்டிருந்தது இந்த மாநிலமே ஆகும். இதற்கான அடிப்படை வேலைகளைச் செய்வதில் சென்னை நூலகக் குழு முக்கியமான பங்கு ஏற்றது. நமக்குச் சுதந்திரம் கிடைத்தவுடன், சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தினுல் பயனடைந்த சில மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோர், மந்திரி பதவி பெற்றனர். அவர்கள் சிறந்த நூலகப் பணியின் அருமையை அனுபவித்து உணர்ந்தவர்கள். 1946-ஆம் ஆண்டிலேயே திரு. அவிஞசிலிங்கம் நூலகத் தீர்மானத்தின் நகல் ஒன்றைத் தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டார். நான் அவ்வாறே கொடுத்தேன். 1948-ஆம் ஆண்டு அது ஒரு சட்டமாகியது. ஆனுல் இப்போது அது இருபது வருடகால அளவுக்குக் காலங்கடந்ததாகி விட்டது. ஒரு பொது நூலக அமைப்பை எப்படிக் குறைந்த செலவில் மிக்க பயனளிக்கும்படி செய்யமுடியும் என்பது பற்றி நாம் நிறைந்த அறிவைப் பெற்றுள்ளோம். ஒரு விஷயத்திற்கு நான் தமிழ்நாட்டு அரசின் கவனத்தை ஈர்க்கவேண்டும். சென்னை சட்டத்திலுள்ள ஒரு பெரிய தவற்றை நான் இங்கே கூறியாக வேண்டும். நூலகத்திலுள்ள நூல்களின் விஷயமாக மக்களின் தேவைகள் நகரில் வாழ்வோர், கிராமப்புறத்தில் வசிப்போர் என்பதற்கேற்ப மிகவும் மாறுபாடுடையதாய் இருக்கிறது. இதற்கான காரணங்களை நாம் ஆராயத் தேவையில்லை. ஆனுல் இது அனுபவத்தின்பால் கண்ட உண்மையாகும். ஆகவே ஒரு மத்திய நூலகத் திட்டத்தில் நகர் புறத்திற்கும், கிராமப் புறத்திற்குமான தேவைகளைக் கலப்பது தவருகும். ஒரு நகர் நூலகத் திட்டம், ஒரு மத்திய நூலகத்தினின்றும் நூலகங்கள் அமைக்கப்படும் விதத்திலும், பணி புரியும் விதத்திலும் மாறுபட்டிருக்க வேண்டும். 1948-ஆம் ஆண்டில், திரு. அவிஞசிலிங்கம் நிதி சம்பந்தமான ஒரு நிர்ப்பந்தம் எவ்வாறு சென்னை சட்டத்தில் இந்தப் பிழையைத் தாம் செய்யக் காரணமாயிருந்தது என்று விளக்கினுர். கடந்த இருபது ஆண்டுகளில் நம் நாட்டில் வரித் திட்டத்தில் ஏற்பட்டுள்ள மகத்தான மாறுதலினுல், இந்த நிதி சம்பந்தமான நிர்ப்பந்தம் இப்போது இல்லை. மைசூர் பொதுநூலகச் சட்டத்தில் இந்த உண்மை நன்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டி

ருக்கிறது. இது நகர நூலகத் திட்டங்களை ஜில்லா நூலகத் திட்டங்களினின்றும் தனியாகப் பிரித்து வைத்திருக்கிறது. தமிழக அரசு இதைக் கவனித்துத் தன் சட்டத்திலுள்ள குறையை நிவர்த்தி செய்யவேண்டும் என்று நான் மிகவும் விரும்புகிறேன். மைசூர் சட்டத்தைத் தன் விசேஷ நிலைகளுக்கேற்ப மாற்றி அமைத்துக்கொண்டு கேரளம், ஒரு நூலகத் தீர்மானத்தைத் தயாரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

74 நூலக சட்டக்கோட்பாடு பற்றிய போதனை

நூலக சட்டக் கோட்பாடு விஷயத்தில் எனக்கு ஒரு அனுபவம் நேர்ந்தது. 1964ஆம் ஆண்டில் பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் Ph. D. பட்டத்திற்குப் பயின்று வந்த மாணவர்களுக்கு நான் நூலகச் சட்டக் கோட்பாடு பற்றிப் போதித்துக்கொண்டிருந்தேன். தங்கள் ராஜ்யத்திற்கான புள்ளி விவரங்களைச் சேகரிக்கும்படி அவர்கள் பணிக்கப்பட்டார்கள். இந்தப் பணியை நூலக இயலின் ஐந்து விதிகளின் தேவைகளுக்கேற்ப செய்யுமாறு அவர்களிடம் கூறப்பட்டது. இதன் பின் மாணவர்கள் ஒவ்வொரு அம்சமாக மாநில நூலகத் தீர்மானத்தின் நகல் ஒன்றைத் தயாரிப்பதற்கான உதவி செய்யப்பட்டது. சில நாட்களுக்குப் பின், அந்த மாநில அரசு பரம்பரையான ரீதியில் தயாரிக்கப்பட்ட தன் தீர்மானத்தின் நகல் ஒன்றைப் பிரசுரித்தது. மாணவர்கள் இந்த இரண்டு தீர்மானங்களையும் ஒப்பிட்டார்கள். தங்களால் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட தீர்மானம்பரம்பரை ரீதியிலிருந்த அரசாங்கத்தின் தீர்மானத்தைவிட மிகுந்த சிறப்புடன் விளங்கியதை அவர்கள் கண்டார்கள்.

75 தேசீய மத்திய நூலகங்கள் திட்டம்

இந்தியா ஒரு மிகப் பெரிய தேசமாகும். இதன் நூலகத் திட்டத்தை ஒருங்கிணைக்கும் பணியை தேசீய அடிப்படையில் செய்ய வேண்டும். இருபது ஆண்டுகளுக்கு முன் வரை, ஒவ்வொரு தேசமும் ஒரு தேசிய மத்திய நூலகம் கொண்டிருப்பது வழக்கமாயிருந்தது. இது இப்பொழுது நடைமுறையில் பயனளிக்காது. ஆகவே, இதற்குப் பதிலாக ஒரு தேசீய மத்திய நூலகங்கள் திட்டத்தை இப்போது உருவாக்க முற்படுகிறோம். இயற்கைப் பாட விஷயங்களுக்கும், மற்ற விஷயங்களுக்கும் டென்மார்க் தனித்தனி மத்திய நூலகத்தைக் கொண்டு விளங்குகிறது. பிரிட்டனும் இந்த வழியைக் கடைப்பிடிக்க முனைந்துள்ளது. அமெரிக்கா விவசாயத்திற்கும், மருத்துவத்திற்கும் தனித்தனி மத்திய நூலகங்களைக் கொண்டிருக்கிறது. இந்தியாவும் தன்னையறியாது இதே திசையில் ஏற்கனவே சென்று கொண்டிருக்கிறது. இயற்கைப் பாட விஷயங்கள், விவசாயம், மருத்துவம் இவற்றில் நாம் இது போன்ற துவக்கம் ஒன்றைச் செய்து விட்டோம். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தேசீய நூலகத்தில் மானுட இயலும், சமூக இயலும் மட்டுமே இருக்கலாம். ஒவ்வொரு தேசீய மத்திய நூலகமும் பாதுகாப்பு, சேகரிப்பு ஆகிய பணிகளைச் செய்ய வேண்டும். மாநில மத்திய நூலகம்

மாநில முழுமைக்கும் செயல்படுவதுபோல், இது தேசம் முழுமைக்கும் செயல்படவேண்டும்.

76 தேசீய காப்பிரைட் நூலகம்

மாநில காப்பிரைட் நூலகத்தைப் போன்றே ஒரு தேசீய காப்பிரைட் நூலகமும் இருக்க வேண்டும். தற்போதுள்ள நான்கு காப்பிரைட் டெபாசிட்டுகளில் மூன்றை நீக்கி விட வேண்டும். அவற்றுல் பயனேதும் இல்லே. அவற்றை வைத்திருப்பதால் செலவுதான் அதிகமாகிறது. தூசி படிந்து, பூச்சிகள் அரிக்க ஏதுவாகி புத்தகங்களின் குப்பைபோன்று அவை சீர்கெட்ட நிலேயில் இருப்பதாகத் தெரிய வருகிறது.

77 மத்திய அரசாங்க நூலகச் சட்டக் கோட்பாடு

நம் தேசீய மத்திய நூலகத் திட்டங்களுக்கு ஒரு ஒழுங்கான அமைப்புக் கொடுக்க வேண்டும். இதற்கு ஒரு மத்திய அரசாங்கச் சட்டம் ஏற்படுத்துவதே சிறந்த வழியாகும். இந்தத் திட்டங்கள் தேசீய நூலகத் திட்டத்தின் சிகரங்களாக விளங்கவேண்டும். இந்த யோசனையை நம் மதிப்பிற்குரிய மத்திய அரசாங்கக் கல்வி அமைச்சரும், திறமையுடன் முன்னேற்றங்கள் செய்பவருமான டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்களுக்கு அளிக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன், அப்போது யுனெஸ்கோவின் நூலகங்கள் பிரிவின் ஆணையாளராகப் (Director) பணியாற்றி வந்த திரு. இ. ஜே. கார்ட்டர் என்பவர் இந்தியாவில் வெளியிடப்பட்ட மாதிரி நூலகத் தீர்மானங்களேப் பார்வையிட்டார். அப்போதே, நூலகச் சட்டக் கோட்பாடு விஷயத்தில் இந்தியா மற்ற தேசங்களேவிட முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார். மத்திய அரசாங்க நூலகச் சட்டம் ஒன்றை நாம் கொண்டிருந்தால் தேசீய மத்திய நூலகங்களுக்கான திட்டம் ஒன்று எளிதாய் அமையும். இதனுல், நன்கு திறமையாகச் செயல்படக்கூடிய ஒரு தேசீய நூலக அமைப்பு ஏற்பட்டு இந்தியாவில் நூலகங்களே மேலும் சிறந்த, நிறைவான முறையில் பயன்படுத்திக் கொள்ளச் செய்யலாம். மேலும், திரு கார்ட்டர் கூறியது உண்மையே என்றும் நிலே நிறுத்தலாம்.

(தொடரும்)

நூருண்டுகளுக்கு மேல்

புகழ் பெற்ற

அச்சகம்

ஹோ அண்டு கம்பெனி

3, ஸ்டிரிங்கர்ஸ் தெரு,

சென்னே-1

புதுமை பொலிவுறும் அமெரிக்கக் கல்லூரி நூலகங்கள்

"கருடாழ்வார்"

தங்க வண்ண முலாம் பூசப்பட்ட அலுமினிய கைப்பிடிக் கிராதிகள் கொண்ட இரட்டைப் படிககட்டு கள்—அவை கண்ணைக் கவரும் வண்ண விரிப்புகளால் அலங்கரிக் கப்பட்டிருக்கும்.

30 அடி அகல (9.1 மீட்டர்) வட்ட வடிவமைப்புக் கொண்ட குழிபோலாழ்ந்த மேல் தளம்.

ஒற்றை விரலால் இயக்கக் கூடிய கணக்கிடும் பெரிய இயந்திரம்.

130 இடங்களில் இருந்து கொண்டே காட்சிக் கேள்விகளை ஒருங்கு சார்ந்த பல வகைப்பட்ட சாதனங்கள் தானாகவே இயங்கி நாடிய ஆராய்வு செய்து, செய்தி களைப் பெற வசதி கொண்ட இடம் என்ன?

ஜேம்ஸ் பாண்டின் மறைவிடமா? விசித்திரமானவர்களின் கற்பனை இல்லமா? சித்தப் பிரமை கொண்டவர்களின் சத்திரமா? ஓய்விடமா? ஓயா மடமா?

இல்லை! சுருள் வட்டப்படிக் கட்டு, குழி போலாழ்ந்த மேல் தளம், டிஜிட்டல் கம்யூட்டர், இதர வசதிகளுடன் கூடிய இடம் இன்றைய அமெரிக்கக் கல்லூரி நூலகங்கள் தான். இங்கே புது மையின் பொலிவையும், மாண வர்களின் படிக்கும் ஆர்வத்தை யும் காணலாம்.

புதிய தொழில் துறை, விஞ் ஞானக் கல்வி நிலையங்கள் பெரு மளவில் தோன்றியுள்ளன. இன்று அமெரிக்கக் கல்லூரி மாணவர்கள் தங்கள் பாடங் களில் முழுத் தேர்ச்சியும் பயிற்சி யும் பெற எலெக்டிரானிக் இயந் திர நுணுக்க வசதிகளைப் பயன் படுத்துகின்றனர்.

ஆதிமுதல் கல்லூரி நூலகங் கள் புத்தகங்கள், பருவ ஏடுகளின் படிப்பகமாக மட்டுமே பயன் பட்டு வந்தன. இன்று, அந்நிலை மாறி இயந்திர நுணுக்கப்பகுதி களும் நூலகங்களில் இணைக்கப் பட்டு, நூலகங்கள் மேலும் பயன்மிக்க தாக்கப்பட்டுள்ளன.

இத்தகைய புதிய தோற்றத் திற்குக் காரணம் அவற்றின்

எச்சரிக்கை!

நூல் விற்பனை நிலையத்தில் அன்று கூட்டம் நிறைந்திருந்தது. ஒருவன் கூட்டத்துள் நுழைந்து கொண்டு வந்து, ஒரு புத்தகத்தின் பெயரைச் சொல்லிக் கேட்டான். விற்பனையாளன் அவன் கேட்ட நூலை எடுத்துக் கொடுத்தான். வந்தவன் மீண்டும் மற்றொரு புத்தகத்தின் பெயரைச் சொல்லிக் கேட்டான். அதைத் தேடி எடுப்பதற்காக கடைக்காரன் திரும்பிய பொழுது, வந்தவன் பணம் கொடுக்காமலேயே புத்தகத்துடன் நழுவிப் போய் விட்டான். அவனைக் காணாததால் திகைத்த விற்பனையாளன், வாயிலில் உட்கார்ந்திருந்த நிர்வாகியிடம் வந்து செய்தியைச் சொன்னான்.

''கொடுத்தது என்ன புத்தகம்?'' என்றார் நிர்வாகி.

''திருடர்கள் எச்சரிக்கை!'' என்றான் விற்பனையாளன்.

''மீண்டும் அவன் கேட்டது?'' என்றார்.

''ஏமாறாதே!'' என்றான்.

நிர்வாகி, ''திருடர்கள் எச்சரிக்கை; ஏமாறாதே'' என்று சொல்லிச் சிரித்தவாறே 'விழிப்பாயிரு' என்னும் நூலைக் கொடுத்து வரிசையில் வைக்கச் சொன்னார்.

—'நிலவை சங்கர்'
நிலக்கோட்டை

செழுமை தான். கல்லூரி நூலகங்களுக்கு என்றுமில்லாத அளவு இன்று மிகுந்த அளவில் பணம் செலவிடப் படுகிறது. அரசு மான்யங்களும் கடனுதவிகளும் இத்தகைய கட்டிட அமைப்புகளுக்கு புதிய வருவாயாக அமைந்துள்ளன.

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப்பின் அமெரிக்கக் கட்டிடக்கலை வெகு வேகமாக மாறி வருகிறது. புதிய புதிய கொள்கைகள், வரைப்படங்கள், தளவாடச் சாமான்கள் முதலியவை கட்டிடக் கலைத்தொழிலை எழுச்சியூட்டும் வண்ணம் பிரமிக்கத் தக்கமாறுதல்களைத் தோற்றுவித்துள்ளன. பள்ளிகள், கல்லூரிகள், மாதாக் கோவில்கள், வீடுகள், அலுவலகங்கள் ஆகியவற்றின் கட்டிடங்களில் இத்தகைய மாற்றங்களைக் காணலாம்.

கல்வி நிறுவன நூலகங்களிலும் இத்தகைய வியத்தகு மாற்றங்கள் தோன்றியுள்ளன. அதனால் தான் அமெரிக்கக்கல்லூரிநூலகங்களின் கட்டிடங்கள் பெரும் மாறுதல்களுடன், இன்றைய நடப்பு சூழ்நிலை, வசதி, பயன் இவைகளுக்கேற்ப அமைக்கப்படுகின்றன.

ஓரல் ஹபர்ட்ஸ் பல்கலைக் கழக நூலகக் கட்டிடம்

அமெரிக்காவில், தென் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒக்லகோமா, குல்சாவிலுள்ள புதிய ஓரல் ஹபர்ட்ஸ் பல்கலைக் கழகக் கட்டிடம் இத்தகைய மாற்றங்களுடன் அமைக்கப்பட்டு, புதிய பொலிவைத் தருகிறது. இங்கே சுழற்படிக்கட்டும், டிஜிட்டல் கம்ப்யூட்டரும் உண்டு.

நூலகக் கட்டிடத்தின் முதல் மாடியில் பரிசோதனைச் சாலைகளும், வகுப்பறைகளும், டெலிவிஷன் ரேடியோ ஸ்டேஷன்களும், அவற்றைக் கேட்கவும், பார்க்கவும் அரங்கங்களும் உள்ளன. உங்களுக்குத் தேவையான செய்திகள் வேண்டுமா? டயல் செய்யுங்கள். உடன் கிடைக்கும்! இங்கே, ஒரு எண்ணைச் சுழற்றினுல் தேவையான செய்திகளை ஒரு சில விஞடிகளுக்குள்ளேயே மேயே பதிவு செய்யப்பட்ட ஆசிரியரின் உச்சரிப்பும் கிடைக்கும்.

நடக்க மெத்தென்றிருக்கும் வசதிகள் கொண்ட சுழல் படிக்கட்டுகளின் மூலம் நூல்கள் உள்ள 3 மாடிகளுக்கும் 3, 4, 5, மாடிகளிலுள்ள படிப்பறைகளுக்கும் செல்லலாம். கடைசி மாடியில் நிர்வாக அலுவலகம் அமைந்துள்ளது.

இந்நூலகம் நீண்ட சதுர வடி

தரக் கூடிய கம்ப்யூட்டர்கள் உண்டு.

நூலகத்தின் இரண்டாவது மாடியில் புக்ஸ்டோரில் விற்பனைக்குக் கிடைக்கும்புத்தகங்களே உண்டு. இங்கே திரை அரங்கு, வகுப்பறைகள், மொழிப் பரிசோதனைச் சாலைகள் தான் உண்டு. ஒரு பொத்தானை விரலினுற் சுண்டினுல் தங்கள் குரலைப் பதிவு செய்யவும், இன்னென்றை அமுக்கினுல் முன்ன

வமைப்பில் எடுப்பான தோற்றத்தைப் பெற்றுள்ளது. ஆண்டு முழுவதும் குளிர் சாதன வசதியும், குளுகுளு அறைகளும், கட்டுப்படுத்தப்பட்ட ஒலி, ஒளி அமைப்பு ஏற்பாடுகளும், தளத்தை விரிப்புகளால் அலங்கரித்திருப்பதும், ஓய்வெடுக்க நல்ல வசதி மிக்க லவுன்சுகளும் மாணவர்களைப் பெரிதும் ஆசைகாட்டி, வசப்படுத்தி, இங்கேயே படிக்க ஓடி வரும்படி செய்துள்ளன.

அரிசோனு மாநில பல்கலைக் கழக நூலகம்

டெம்பேயிலுள்ள அரிசோனு மாநில பல்கலைக் கழக நூலகத்தில் மேற்சொன்ன வசதிகள் அனைத்தும் உள்ளன. அமெரிக்காவில் தென் மேற்குப் பகுதியில் பாலை நிலச் சூழலில் உள்ளது இப்பல்கலைக் கழகம். இங்கு இந்நூலகக் கட்டிடம் தனி முறைச் சிறப்புடன் அமைக்கப்பட்டிருக்கிறது. அழகிய குழி போலாழ்ந்த மேல் தளம், அழகிய இயற்கைக் காட்சிகள் அமைந்த நில அமைப்பு, மரங்கள், புதர்கள், புல்வெளி இவைகளுடன் கூடிய இந்நூலகக் கட்டிடம் பாலைவனப் பகுதியில் இருக்கும் பசுந்திடலாகக் காட்சியளிக்கிறது.

அமெரிக்காவில் மற்ற மாநிலங்களில் உள்ளதை விட தென் மேற்கு மாநிலத்தில் தான் நூலகங்கள் குறைவாகவே உள்ளன. ஆகவே இத்தகைய நூலகக் கட்டிட அமைப்பு அறிவு வளர்ச்சிக்கும் ஒரு பசுந்திடலாகவே காட்சியளிக்கிறது.

இங்கு வேனிலகங்கள் ஓதுக்குப் புறங்களிலே சாவகாசமாகப் படிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

கீழ்த்தளத்தில் விசாலமான வட்ட வடிவ பால்கனிப் பகுதியில் திறந்த வெளிப் படிப்பறையும் உண்டு.

இந்நூலகத்தில் 1500 மாணவர்கள் அமர்ந்து படிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நூல் அடுக்குகளுக்கிடையே இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. 10 லட்சம் நூல்கள் இங்குண்டு. பண்டைக் காவத்தில் நூலகங்களில் பெரிய பெரிய படிப்பறைகள் தான் இருக்கும். இன்றோ படிப்பறை சிறிய அளவிலேயே அமைந்திருக்கின்றன. கட்டிடத்தின் ஒவ்வொரு தளத்திலும் எதிரொலிக் கட்டுப்பாடுகள் கொண்ட அறைகள் உள்ளன. இங்கு இசைத் தட்டுகளைக் கேட்கவும், மைக்ரோ பிலிம்களை பார்த்துப் படிக்கவும், தேவையிருப்பின் டைப் செய்யும் வசதியும் உள்ளன. இவை எலக்டிரிக் டைப்ரைட்டர்களாகும்.

புள்ளி விபரங்களைக் கணிக்கும் இயந்திரம், கம்ப்யூட்டர் வைக்க ஒரு அறை தனி முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சேபட் ஜூனியர் கல்லூரி நூலகம்

சான்பிரான்ஸிஸ்கோ அருகில் உள்ள கலிபோர்னியாவில் உள்ள

வருந்துகிறோம்

"ஆனந்த விகடன்" ஆசிரியரும், ஜெமினி அதிபருமான திரு. எஸ். எஸ். வாசன் அவர்களின் அகால மரணம் பத்திரிகை, சினிமா உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இந்த இரு துறைகளிலும் வாசன் அவர்கள் ஆற்றிய தொண்டு மகத்தானது; போற்றுதற்குரியது! அவருடைய மறைவினல் துயருறும் அவருடைய குடும்பத்தினருக்கு நூலகம் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது!

சேபட் ஜூனியர் கல்லூரி நூலகக் கட்டிடம் புதிய நவீன அம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இது வட்ட வடிவ அமைப்பும் நவீன கட்டிட அமைப்பும் கொண்டது. இது சமீபத்தில் தான் கட்டப்பட்டதாகும்.

இக்கல்லூரி நூலகக் கட்டிடம் கல்லூரி நிதியின் பெரும் பகுதியை வளைத்துக் கொண்டு விட்டதால், வட்ட வடிவத் தோற்ற மளிப்பதாகக் கல்லூரி நிர்வாகி ஒருவர் வருணித்துள்ளார்.

எலக்ட்ரானிக் இயந்திர நுணுக்கப் பகுதி, தானே இயங்கும் செய்தி மீட்பு சேகரிப்பு முறை மற்றும் வழக்கமான நூலகப் பணி வசதிகள் உண்டு. மாணவர்கள் தனி அறைகளில் அமர்ந்து பொருள் பட்டியலைப் பார்த்து, தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்து, ஒரு குறிப்பிட்ட பொத்தானை அமுக்கி, காதில் கேட்கும் கருவிகளைப் பொருத்திக் கொண்டால், தேவையான செய்திகளை விரைவிலேயே பெற்றுப் பயன் பெறலாம். இதனுல் நூலக வசதிகளை நன்கு பயன் படுத்த முடிகிறது.

டெலிவிஷன் வசதியும், பருவ ஏடுகளின் பழைய இதழ்களை மைக்ரோ பிலிம் இயந்திரங்கள் மூலமாகக் கற்க வசதியும் உண்டு.

இரட்டை மாடி கான்கிரீட் குளிர் சாதன வசதி கொண்ட கட்டிடம் முழுவதும் தரை விரிப்புகளுடன் கூடியதாகும். வெளிப்புறத்தில் படிக்குமிடமும், எஸ்(S)போன்ற அமைப்பு கொண்டுள்ள புத்தக அலமாரிகளும் இக்கட்டிடத்தின் சிறப்பம்சங்களாகும். வட்ட வடிவக் கட்டிடத்தில் சாதாரண நூல் அடுக்குகள் வசதியாக இருக்காது. ஆகவே தான் இப்புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்று அமெரிக்கக் கல்லூரிகளில் நூலகங்களே பிரதான அம்சமாக, தொடர் கல்வி பெரும் சமுதாய மையமாகப் பயன்படுத்தப்படுகின்றன. வசதிகள் பெருகிவிட்டன. அதனுல் நல்ல சிறப்பு மிக்க நூலகப் பணியும் கிடைக்கிறது அமெரிக்காவில். ஆகவே தான் இக்கல்லூரி நூலகங்களில் புதுமைப் பொலிவைக் கண்டு இன்புற முடிகிறது.

●

நூலகம் சிறப்பிதழ்

1969 நவம்பர் மாத **நூலகம்** பல அறிஞர்களின் சிறப்புக் கட்டுரைகளுடனும், நூலகவியலைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடனும் ஏராளமான படங்களுடனும் அதிக பக்கங்களில் **தீபாவளி** சிறப்பிதழாக வெளிவருகிறது.

''தமிழ்வாணன்'' சந்திப்பு

தவிர்க்க முடியாத காரணங்களால் 'தமிழ்வாணன்' அவர்களின் சந்திப்புக் கட்டுரை இந்த இதழில் இடம்பெறமுடியவில்லை. அடுத்து வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விஜிபி

சுலபத் தவணைத் திட்டம்

விஜிபியில் சகாயமான விலையில் தரமுள்ள பொருள்களை வாங்குவது அனைவருக்கும் திருப்தியளிக்கிறது. யாவரும் விஜிபி தவணைத் திட்டத்தில் பொருள்கள் வாங்குவது மிகச் சுலபம்.

விஜிபி சுலபத் தவணைத் திட்டம் இப்பொழுது விஜிபி 'மொபைல் விற்பனை வேன்கள்' மூலம் உங்கள் வீடு தேடி வருகிறது.



வி.ஜி. பன்னீர்தாஸ் & கோ.

சைதாப்பேட்டை, சென்னை-15. போன் : 442333
கிளை : தி. நகர், சென்னை-17. போன் : 440246

VGP தரமிகு பொருள்களின் சிறப்புமிகு விற்பனையாளர்கள்

NAS-98 TM-A

ஜெர்மன் நூலகங்களின் வரலாறு

டாக்டர். எஸ். கிரீசன் M. Sc; Ph.D.

ஐரோப்பாவின் கலாச்சார வரலாற்றிலே ஜெர்மனி தனது பூகோள நிலையினால் முக்கியமான பங்கு பெற்றிருக்கிறது. மேற்கத்திய கலாச்சாரத்தின் முதல் நூலகம் அலெக்ஸாண்டிரியாவில் தோன்றிய போதிலும் முதலில் உரோமப் பெருமக்களாலும் பிறகு புனித உரோமப் பேரரசின் வழித்தோன்றல்களான ஜெர்மானிய அரசர்களாலும் ஐரோப்பியக் கலாச்சாரப் பரம்பரை பாதுகாக்கப்பட்டு வந்தது. ஜெர்மானிய நாட்டுக்கு நூல்நிலைய இயக்கம் கிறித்துவ மதத்தோடு கூட, தவத்திரு போனிஃபேசுடன் (St. Boniface) வந்தது முதன் முதலாக இவ்வாறுஏற்பட்ட நூல் நிலையம் ஃபுல்டாவில் (Fulda) ஸ்டுர்ம் (Sturm) என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. கிறித்துவ மதப் போதகர்களால் கிறித்துவமும் நூல்நிலைய இயக்கமும் தெற்கு ஜெர்மனியிலிருந்து வடக்கு ஜெர்மனிக்கு வரவே, பிறகு மெல்ல மெல்ல கிழக்கு ஜெர்மனிக்கும் பரவலாயிற்று.

இவ்வாறு மதத்தலைவர்களால் ஏற்படுத்தப்பட்ட (கி. பி. 779) நூல் நிலையங்களைத் தவிர மகா சார்லஸ் அரசனும்(Charlemagne) அவருடைய பேரர் மொட்டை சார்லசும் (Charles. the bald) தங்களுக்கென தனி நூல் நிலையங்கள் வைத்திருந்ததாகத் தெரிகிறது.

இந்தக் கரோலிங்கிய அரசர்களுக்குப் பிறகு பெரும் நூல் நிலையங்கள் மதத்தலைவர்களிடமே இருந்தன. உதாரணமாக ஃபுல்டாவில் கி.பி. 800-ல் ஆட்சி செய்து வந்த ரபானுஸ் மௌருஸ் (Rabanus Maurus) காலத்திலே அங்குள்ள நூல் நிலையம் முழு வளர்ச்சியும் பெற்று நின்றது. ''ஆண்டவனால் உலகத்துக்கு அனுப்பப்பட்ட நற்பொருள்கள் யாவும் புனித ஆகமங்களின் பொன்மொழியாலும் மற்றும் உலக அறிவு அனைத்தும் இங்கு உள்ளன'' என்று அந்த மடத்தின் தலைவர் இலத்தீன் மொழியில் பாடியிருக்கின்றார்.

[Hrabani Maeeri Calminee xxiii: Ad Gerhohum Prestiberum] இக் காலத்திலேயே ஸாக்ஸனியில் இருந்த கார்வே (Corvey) நகரி லும் ஒரு சிறந்த நூல்நிலையம் இருந்தது. இந்த நூல் நிலையம் 12வது நூற்றூண்டு வரையில் இருந்ததாகத் தெரிகிறது.

மேற்கு ஜெர்மனியில் ஃபுல்டா வைத் தவிர வைஸன்பெர்க், (Weissenberg) லோர்ஷ் (Lorsch) ஆகிய இடங்களில் நூல் நிலையங் கள் இருந்ததாகத் தெரிகிறது. இந்தக் காலத்தில் சுவேபியா (Swabia) ஜெர்மன் நூல் நிலையங் களுக்குத் தாயகமாக இருந்தது. 9-வது நூற்றூண்டின் பிற்பகுதி யில் மடாதிபதி கிரிமால்ட் (Grimald) என்பவரும் ஹார்ட் முட் (Hardtmut) என்பவரும் செயிண்ட். கால் (St. Gall) என் னும் நகரில் ஒரு சிறந்த நூல் நிலை யத்தை ஏற்படுத்தினர். புகழ் பெற்ற கவிஞர் நோட்கர் பால் புஸ் (Notker Bolbus), புலவர் எக்கஹார்ட் (Ekkehart), நோட் கர் லபேயோ (Notker Labeo) ஆகியோர் இந்நூல் நிலையத்தின் நூலகர்களாக இருந்தவர்கள் தான். இவ்வாறு மூர்பாஹ் (Murbach) என்னும் ஊரிலும் நூலகம் இருந்தது. கான்ஸ்டன்ஸ் ஏரியில் அமைந்துள்ள தீவான ரைஷநௌ (Reichenau) ஒரு அருமையான நூல் நிலையத்தின் தாயகமாக இருந்தது. நான் அங் குள்ள நூல்நிலையத்தைப் பார் வையிட்டபோது அந்த நூல்நிலை யத்திலிருந்து எஞ்சியிருந்த சில பிரார்த்தனைப் பாடல்களின் பிரதிகளைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

9-வது, 10-வது நூற்றூண்டில் ஏற்படுத்தப்பட்ட நேரஸ்ஹைம் (Neresheim) மடத்து நூல்நிலை யத்தை சில நாட்கள் பார்வை யிடும் பேறு கிடைத்தது. மிகுந்த அக்கறையுடன் பைபிளும் அதன் உரைகளும், மற்றும் நாற்றிசை களிலும் சென்று தாம் கண்ட அனுபவத்தை வரிவடிவு அமைத்து, தாய் நாட்டுக்கு எழுதி அனுப்பிய மதப்பிரசாரகர் களின் நூல்களும், இனிமை மிக்க கிரிகோரிய இசை நூல்களும் ''இன்குநாப்லா'' (Incunabula) எனக் கூறப்படும் முதன் முதலாக அச்சேறிய நூல்களும் கண்டோர் மனம் கவருமாறு அங்கே வகைப் படுத்தப்பட்டுள்ளன. மத்திய ஐரோப் பாவில் உள்ள மற்ற நூல் நிலை யங்கள் போலவே இதுவும் மதச் சீர்திருத்தக்காரர்களின் சீர் தி ருத்த வெறி அலைக்கும், மதச்சார் பற்ற நெப்போலியன் அரசாங்கத் தின் காட்டுமிராண்டி வெறிக்கும் தப்பித்து அருகில் உள்ள டுர்ன்- டார்க்ஸிஸ் இளவரசரால் காப் பாற்றப்பட்டு மடத்திற்குத் திருப்பி அளிக்கப்பட்டது. அந் நூல் நிலையத்தில் நுழைந்ததுமே ஐரோப்பியக் கலாச்சாரத்தின் கரடுமுரடான வரலாறு நம் அகக்கண் முன் தோன்றுகிறது.

மற்றும் ரேகன்ஸ்புர்க் (Regensburg) டெகர்ன்ஸே (Tegernsee) மைன்ஸ் (Mainz) கொலோன் (Cologne) சார்லஸ்புர்க் (Charlesburg) முதலிய நகரங்களிலும் மத அடிப்படையிலே நூல் நிலையங் கள் தோன்றின. இக்காலத்து நூல் நிலையங்களுள் மதச் சார்பற் றது என்று சொல்லக்கூடியது ஹில்டஸ்ஹைம் (Hildesheim) என்னும் ஊரில் பெர்ன்வார்ட் (Bernward) என்பவர் ஏற்படுத் தியதுதான்.

இக்காலத்திய நூல் நிலையங் களுள் நான் பார்வையிட்ட மற் றொன்று டோனௌ எஷிங்கன் (Donau-Eschingen) என்னும் நகரத்திலே உள்ளது. இந்

நூல்நிலையத்தில் உள்ள நீபலுங்கன் (Niebelungen) பாடல் தொகுதி பழம் ஜெர்மானிய இலக்கியத்தில் தனிப்பெரும் இடம் தாங்குகின்றது. (12ஆம் நூற்றுண்டிற்குப் பின்னரே மடங்களைச் சார்ந்த நூல் நிலையங்களில் கூட புறப்பொருள் பற்றிய நூல்களும் இடம் பெறலாயின.) பொதுவாகப் பல மடங்களில் கல்வியறிவும் நூல்நிலையத்தின் சிறப்புணர்வும் மங்கத் தொடங்கிய போதிலும், இக்காலத்திலும் நூல் நிலையங்களும் நூல் நிலைய வல்லுனர்களும் இல்லாமல் போகவில்லை. இக்கால நூல்நிலைய வல்லுனர்களுள் தலை சிறந்து விளங்குகிறவர் ஐன்ஸீடல்ன் (Einsiedeln) என்னும் ஊரில் வாழ்ந்த ஹைன்ரிஷ் வான் லிகர்ஸ் (Heinrich von Ligerz) என்பவராகும். கான்ஸ்டன்ஸில் கூடிய மகாநாடும் புர்ஸ்ஃபெல்டில் (Bursfeld) கூடிய மகாநாடுகளும் மடத்தில் உள்ள நூல்நிலையங்களை சீர்திருத்தவும் விரிவாக்கவும் பல ஆலோசகர்களை வழங்கின. இக்காலத்திலேயே அகஸ்டின் பாதிரிமார்களும் பிரான்ஸிஸ்கன் பாதிரி மார்களும் நூல் நிலையங்களை ஏற்படுத்த ஆரம்பித்தனர். இவர்களிலெல்லாம் மேம்பட்டு நின்றது டொமினிகன் பாதிரிமார்களின் முயற்சி.

இஸ்லாமியப் பேரரசின் எல்லைகள் ஸ்பெயின் வரையில் பரந்து கிடந்த இக்காலத்தில் அராபிய நூல்நிலையத் திட்டங்கள் ஐரோப்பாவிற்கும் எட்டியதில் வியப்பொன்றுமில்லை. ஹோஹென்ஸ்டௌபன் (Hohenstaufen) பேரரசின் 2-ஆம் ஃபிரடெரிக் (Frederik II) அராபியக் கல்வி முறையினுல் மிகுந்த சீர்திருத்த எண்ணம் கொண்டவராஞர்.

14-ஆம், 15-ஆம் நூற்றுண்டுகளில் ஜெர்மனியில் நகரங்களின் எழுச்சியினுல் நடுத்தரத்தைச் சேர்ந்த குடும்பங்களும், பணக்காரக் குடும்பங்களும் வீட்டு நூல் நிலைய இயக்கங்களை ஆரம்பித்தனர். இதன் விளைவாக 15-ஆம் நூற்றுண்டிலே புத்தக வர்த்தகம் ஃபிரான்க்ஃபர்ட் (Frankfurt) ஹாகனௌ, (Hagenau) லீப்ஸிக் (Leipzig) போன்ற இடங்களில் வளரலாயிற்று. டிபோல்ட் லௌபர், (Diebolt Lauber) கெர்ஹார்ட் க்ரோட் (Gerhard Groot போன்ற பலர் இதுவரை பாதிரிமார்களின் தொழிலாக இருந்த புத்தக வெளியீட்டை மேற்கொள்ளலாயினர். 15-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் புத்தெழுச்சி (Renaissance) ஏற்பட்ட பிறகு பல்கிப் பெருகலாயின. இக்காலத்தில் இருந்த புலவர் நிக்கொலஸ் குஸானூஸ் (Nicholas Cusnaus) பெரும் புலவராக மட்டுமின்றி நூல் நிலையராகவும் இருந்தார். மதக் கோட்பாடுகளையும் மனிதத் தன்மை இயக்கத்தையும் ஒருங்கிணைத்த இவர் பழங்கால இலக்கியங்கள் நூல் நிலையங்களில் இடம் பெற வழிவகுத்தவராஞர். இவருடைய சீடர்களான கோஸம்ப்ரோட் (Gossembrot) ஆல்ப்ரஹ்ட் ஃவான் ஐப் (Albrecht von Eyb) முதலானோர் நிக்கொலஸின் எண்ணங்கள் நாடு முழுதும் பரவ பெருந்துணை புரிந்தனர்.

இக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரிய நூல்நிலையமான ஹைடல்பர்க் நூல்நிலையம் மதச் சீர்திருத்தக்காரர்களாலும் (Reformers) மறு சீர்திருத்தக்காரர்களாலும் (Counter-Reformers) மிகவும் சீர்குலைக்கப்பட்டு ஏறக்குறைய அழிந்தது என்றே சொல்லலாம். ஹைடல்பர்க் நூல் நிலையத்தின் ஒரு பெரும்பகுதியை இன்றும் உலகப் புகழ்பெற்ற வாடிகன் நூல் நிலையத்தில் காண

லாம். இந்தக்காலத்தில்தான் புத்தகம் எழுதுவோர், புத்தகம் சேமிப்போர் ஆகியோர் இரு வேறு குழுவினர் ஆயினர். நூரன் பெர்க்கில் (Nurenberg) ஹார்ட் மன்ஷேடல் (Hartmann Schedel) பிர்க்ஹைமர் (Pirkheimer) ஒளக்ஸ்புர்க் (Augsburg)ல் வாழ்ந்த பாய்டிங்கர் (Peutinger) ஆகியோர் நூல் நிலையங்கள் வைத்திருந்த தனி நபர்கள்ஆவர். விட்டென்பர்க்கில் (Wittenberg) வாழ்ந்த புத்தகக் கட்டிட வல்லுனர், ஆட் ஹைன்ரிஷ் (Ott Heinrich) மன்னரால் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஹைடல்பர்க்கில் உள்ள புத்தகக் கட்டிட வல்லுனர்கள், இவர்களின் திறம் இன்றும் பாராட்டுதற்குரியது. ம்யூனிச் (Miunchen) நகரத்தில் வாழ்ந்த ஜான் ஜேக்கப் ஃபுக்கர் (John Jacob Fugger) ஆற்றிய நூல்நிலையப் பணி அவருக்கு ஜெர்மனியிலேயே மிகக் கற்றுணர்ந்த பெரியார் என்னும் பெயரை வாங்கித் தந்தது.

இவற்றில் பல நூல்நிலையங்கள் புத்தகங்கள் வைக்க மட்டுமின்றி கண்காட்சி சாலைகளாகவும் விளங்கின. இக்காலத்தில்தான் ஃபிரான்க்ஃபர்டில் (Frankfurt) முதன் முதலாகப் புத்தகச்சந்தை கூடியது. நூல்நிலையக் கலையின் தந்தை எனக் கருதக்கூடிய கோன் ராட் கெஸ்னர் (Konrad Gesner) விளங்கியதும்இக்காலத்தில்தான். கெஸ்னர் மருத்துவராக மட்டுமின்றி பல கலை கற்ற புலவராகவும் விளங்கினார். 1545ல் இவர் எழுதிய ''பிப்லியோ தெக்கா யூனிவர்ஸாலிஸ்'' (Bibliotheca Universalis) என்பது முதன் முதலாக உலகில் எழுதப்பட்ட நூலகக் கலை நூலாகும்,

ஆனால் ஜெர்மனி அடைந்தஇம் மாட்சி அதிக நாள் நிற்கவில்லை. இங்கிலாந்தில் போட்லியினால் (Bodley) ஏற்படுத்தப்பட்ட நூல் நிலையமும், ஃபிரான்சில் ஏற்படுத்தப்பட்ட தேசீய நூல் நிலையமும் மிக விரைவாக முன்னேறி ஜெர்மனியின் புகழை மங்கச்செய்தன. பெர்லினில் ஏற்படுத்தப்பட்ட நூல் நிலையம் ஒன்றுதான் பெருமை வாயந்ததாக விளங்கியது. இந்நூல் நிலையத்தின் தலைவராக விளங்கியவர் ஃபிரான்க்பர்ட் பேராசிரியரான ஹென்ட்ரைஷ் (Hendreich). 17ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஹனேவர் நகர நூலகத்தின் தலைவரான லைப்னிஸ் (Leibnitz) வந்ததில் இருந்து 16ஆம் நூற்றுண்டு நூல் நிலைய வரலாற்றிலே ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டது. (1524-25) போன்ற புரட்சிகளும், மதச் சீர்திருத்தங்களும் துருங்கியாவிலிருந்து மைன் நதி வரையிலும், ஒடன்வல்ட் காடுகளிலிருந்து கருங்காடுகள் வரையிலும் இருந்த எல்லா மடங்களையும் நூல்நிலையங்கள் உட்பட தவிடுபொடியாக்க முற்பட்டன. ஆனல் மதச் சீர்திருத்தம் இவ்வழிவு வேலை மட்டுமின்றி ஆக்க வேலையையும் மேற்கொண்டிருந்தது. 1524ல் ஜெர்மனியில் உள்ள எல்லா நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் எழுதிய கடிதம் ஒன்றில் மார்டின் லூதர் (Martin Luther) நூல்நிலையங்களின் இன்றியமையாமையைப் பற்றியும் அவற்றைப்பாதுகாத்து வளர்க்க வேண்டிய பொறுப்பினைப் பற்றியும் எழுதியுள்ளார். ''ஜெர்மனியின் ஆசிரியர்'' எனப்படும் மெலங்க்டோன் (Melancthon) ஜான் பூகென் ஹாகனும் (John Bugenhagen) நூல் நிலைய வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டினர். இக்காலத்தில் ஏற்பட்டிருந்த புது பல்கலைக்கழகங்கள், கோனிஸ்பர்க் (Konigsberg)

ஹெல்ம்ஸ்டட் (Helmstedt) ஏரை (Jena) மார்புர்க் (Marburg) ஆகியவை மிகுந்த உற்சாகத்துடன் நூல்நிலையங்களை ஏற்படுத்தலாயின. மறு சீர்திருத்தவாதிகளும் குறிப்பாக கனிஸியஸ் (Canisuis) பாதிரியாரும் இவ்வித சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

கூடன்பெர்க்கினல் (Gutenberg) கண்டு பிடிக்கப்பட்ட அச்சு இயந்திரம் நூல்களை மட்டுமின்றி நூல் நிலைய அமைப்புக்களையும் மாற்றி விட்டது. மதச்சார்பற்ற நூல் நிலையங்களின் எண்ணிக்கை வெகு விரைவாக அதிகமாயிற்று. ஃபுக்கர் (Fugger) குடும்பத்தினரும், ஹன்ஸ் ஸாக்ஸ் (Hans Sachs) என்னும் கவிஞரும் இத்தகையோரில் சிலர். குறு நில மன்னரும், நிலக்கிழார்களும் நூல் நிலைய சேகரிப்பைப் பெருமிதத்துடன் ஏற்றுக்கொண்டனர். ப்ரஷ்யாவின் ஆல்பர்ட் மன்னர், பிரன்ஸ்விக்கின் ஜூலியஸ், ட்ரஸ்டனின் ஆகஸ்ட், காஸரின் வில்வியம் ஆகியோர் இத்தகையோரே. இக்காலப் புத்தகங்களின் கட்டிடவேலை உலகப் புகழ் வாய்ந்ததாகும். கோனிக்ஸ்பர்க்கில் இருந்த வெள்ளை ஜெர்மன் நூல் நிலையம் இத்தகையது. பெருங் கணித விற்பன்னர், விஞ்ஞான மேதை, புலவர் என்றெல்லாம் பெயர் பெற்ற லைப்னிட்ஸ் (Leibnitz) நூல் நிலையத்தின் தலைவராக இருந்து ஆற்றிய பணி விரிக்கிற் பெருகும். அவர் இட்ட வித்து தான் இன்று ஜெர்மனியில் மட்டுமின்றி உலக முழுவதற்கும் நூல் நிலைய வளர்ச்சி ஏற்படக் காரணமாயிருந்தது என்றால் மிகையாகாது. அவருக்குப் பிறகு ஃபிரான்ங்க, (Francke) ஃவான் முன்ஷ்ஹௌஸன் (Von munchhausen) ஆகியோர் லைப்னிட்ஸின் வழி நடந்தனர். 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏபர்ட் (F. A. Ebert) முதன் முதலாகப்பொது நூலகங்களில்பணியாற்றும் நூலகர்களுக்குப்பயிற்சி வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்தினர். "A Aliis Inser-Viendo Consumor" - "என் சக்தி முழுதும் மற்றவர்களுக்கு சேவை செய்வதிலேயே" என்பது அவர்கள் நூலகர்களுக்கு வகுத்த விதியாயிற்று. பான் நகரத்தில் ஃபிரட்ரிஷ் ரிட்ஷெல் (Friedrich Ritchl) பல்கலைக் கழக நூல் நிலையத்தை மிகச் சிறப்புள்ளதாக ஆக்கினர். நூலகர்களின் உரிமைக்குரல் எழுப்பின முதல் நபர் என்ற பெருமை இவருடைய மாணவரான க்ளெட்டேவைச் (Klette) சாரும். 19-ம் நூற்றாண்டின் ப்ரஷ்யப் பேரரசர் அல்ட் ஹோஃப் (Althoff) நூல் நிலையங்களின்பல்வேறு கேந்திரங்கள் ஒன்று சேர்ந்து இயங்குவதற்கு வழி வகுத்தார். நூல் நிலையங்களுக்குஎன்றேதனியாகப் பத்திரிகை ஒன்றை வெளியிட ஹார்ட்விக் (Hartivig) என்பவருக்கு உதவி செய்தார். புத்தக வெளியீடுகள் மட்டுமின்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள், பல்கலைக் கழக வெளியீடுகள் பற்றியும் அவர் பட்டியல் தயார் செய்ய ஏற்பாடு செய்தார். புத்தக வெளியீட்டு அறிவிப்பு நிலையம் ஒன்றையும் நூல் நிலையங்களுக்கிடையே புத்தகங்கள் கொடுக்கல் வாங்கல் நிகழ்வதற்கும் ஏற்பாடுகள் செய்தார். இசைத்தட்டு நிலையங்கள் ஏற்படுத்தியவரும் இவரே. சுருங்கச் சொன்னல் லைப்னிட்ஸின் எண்ணங்கள் அல்ட்ஹாஃபின் திட்டங்கள் இரண்டும் சேர்ந்து உருவானதே தற்கால ஜெர்மன் நூல் நிலையங்கள் எனலாம்.

○

பத்ம ஸ்ரீ டாக்டர் வி. கே. கோகக்

மணவை முஸ்தபா



'விநாயக்' என கன்னட இலக்கிய அறிஞர்களாலும் கவிஞர்களாலும் பெருமையோடு அழைக்கப்பெறும் பத்மஸ்ரீ டாக்டர் விநாயக் கிருஷ்ண கோகக் அவர்கள் இன்றைய கன்னட இலக்கிய உலகின் குறிப்பிடத் தக்க ஒரு சிலரில் தலையாயவராக விளங்குபவர் ஆவார்.

சிந்தனை தேங்கிய ஒளியுமிழும் கண்களும் பரந்த நெற்றியும், அறிவின் ஆழத்தை அளந்துகாட்டும் அழகிய மூக்கும் அவரைக் கலையின் வடிவமாகவே காட்டுகின்றன. அறுபது ஆண்டுகளைக் கடந்துவிட்ட முதுமையின்சாயல் முகத்தில்படர்ந்திருப்பினும், இருபத்தைந்து வயது இளைஞனுக்குரிய உணர்ச்சியும் துடிப்புமே உருவாயமைந்த பெருங்கவிஞராக இலக்கிய வித்தகராக— ஆராய்ச்சியறிஞராக — திறன்மிக்க திறனாய்வாளராக - நாட

காசிரியராக - நாவலாசிரியராக- எழுச்சிமிக்க எழுத்தாளராக - தலைசிறந்த கல்வித்துறையாளராக திகழ்பவர் டாக்டர் கோகக் அவர்கள்.

கவிஞர் டி. ஆர். பேந்த்ரேயின் மந்திரசக்தி வாய்ந்த கவிதையால் ஈர்க்கப்பெற்ற இளைஞர் கோகக் கவிதைக் கன்னியிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டார். ஷெல்லியின் இலட்சியஉணர்வும், கீட்ஸின் அழகுணர்ச்சியும், ஏ.இ. ஹௌஸ்மெனின்கற்பனைவளமும், அரவிந்தரின் தத்துவ நோக்கும் இவரைப் பெரிதும் ஆட்கொண்டதோடு, காதல், தத்துவத் துறைகளில் புதிய நோக்கில் சக்திமிக்க கவிதைகள் புனையப் பெரிதும் தூண்டி தலைசிறந்த இலட்சியவாதியாகவும், மனித இனத்தின் பரிவுமிக்கப் பண்பாளராகவும் மாற்றின.

1934 இல் வெளிவந்த 'கலோபாசகர்' (கலை வழி பாடுவோன்) என்ற கவிதைத் தொகுப்பும், 1935 இல் வெளிவந்த 'பயண' (பிரயாணம்) என்ற கவிதைத் தொகுப்பும் இவரது சிறந்த கற்பனை வளத்துக்கும், உள்ளத்தைக் கவரும் இனிமைக்கவிதை படைக்கும் ஆற்றலுக்கும் கட்டியங் கூறுவனவாக அமைந்துள்ளன.

1939 இல் வெளிவந்த இவரது 'சமுத்ர கீதகளு' (கடற் கவிதைகள்) என்ற தொகுப்பு கவிதைத் துறையில் புது முயற்சி காண விழையும் இளைஞர்களுக்கு புது வழி காட்டும் புத்திலக்கியக் கவிதைக் களஞ்சியமாக அமைந்தன. கன்னடக் கவிதையுலகில் புதுவழி வகுத்த இவரைக் கன்னடக் கவிதைத் துறையின் புதிய இயக்கத்தின் வலுமிக்கத் தலைவராக கவிஞர் உலகம் போற்றிக் கொண்டாடி மகிழ்ந்தது. 1950 இல் வெளி வந்த இவரது 'நவ்ய கவிதைகளு' (புதியகவிதைகள்) என்ற தொகுப்பு கன்னட கவிதையுலகுக்கே புது வழி வகுத்துத் தந்த புத்திலக்கியக் கவிதைகள் எனலாம். 1957 இல் இவர் வெளியிட்ட 'த்யாவா பிரதிவி' (விண்ணும் மண்ணும்) என்ற காவியம் அவருக்குச் சாகித்திய அகாதெமியின் பரிசைப்பெற்றுத் தந்து சிறப்பித்தது.

பழமைக்கும் புதுமைக்கும் இடையேயுள்ள போராட்டத்தைச் சித்தரிக்கும் 1200 பக்கங்களைக்கொண்ட இவரது 'சமர சவே ஜீவன' (சமரசமே வாழ்க்கை) என்ற புதினமும், ஷேக்ஸ்பியரது நாடகங்களோடு ஒப்பிடத்தக்க 'ஜனநாயகா' (மக்கள் தலைவன்) என்ற நாடகமும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட மார்க்ஸீயம் - முதலாளித்வம் ஆகிய இரு பெரும் தத்துவங்களின் போராட்டங்களைக் கருத்தாழத்தோடு விளக்கும் 'யுகாந்தரா' (யுக மாற்றம்) என்ற நாடகமும் இவரது எழுத்தாற்றலுக்கும் புத்துலக நோக்குக்கும் இணையற்ற எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

இவரது ஆழ்ந்த புலமைக்கும் விமர்சனத் திறனுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன 'இந்தின கன்னட காவ்யத கொத்துகுரிகளு' (இன்றைய கன்னட கவிதையின் நோக்கம்) 'நவ்யதே ஹாகு காவ்ய ஜீவன' (புதுமையும் கவிதை வாழ்வும்) என்ற இரு விமர்சனப் படைப்புகள்.

கட்டுரைகளை எழுதுவதில் இவருக்குள்ள ஆற்றலுக்கு சான்றாய் விளங்குவன இவர் இங்கிலாந்து சென்று படித்துத் திரும்பிய அனுபவங்களைப் பசுமையாகச் சித்தரிக்கும் 'சமுத்ரதாரேசே இண்டா' (கடல் கடந்து) என்ற பயண நூலும், 'செலுவி நிலவு' (அழகு நிலையம்) என்ற மற்றொரு கட்டுரைத் தொகுப்பும். கன்னடத்திலும் ஆங்கிலத்திலுமாக கிட்டத்தட்ட 40 நூல்களுக்குமேல் எழுதியுள்ளார் டாக்டர் கோகக்.

1909 ஆகஸ்ட் 10 ஆம் நாள் மைசூர் மாநில, தார்வார் மாவட்ட சாவனூரில் பிறந்து இந்தியாவிலும் இங்கிலாந்திலும் படித்துப் பட்டம்பெற்று, பூனாவிலுள்ள பெர்கூஸன் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகத் தம் கல்வித்துறைப் பணியைத் தொடங்கிய டாக்டர் கோகக் இன்று பெங்களூர் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும், தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் தலைவராகவும் அமைந்து, அறிவுலக முன்னேற்றத்திற்கு அரும் பணி ஆற்றி வருகிறார். பல இலக்கிய மாநாடுகளைத் தலைமை தாங்கி நடத்தியும், மாநில, இந்திய, அனைத்துலக கவிஞர்மாநாடுகளிலும் கல்வியரங்குகளிலும் பங்கேற்று இலக்கியத் தொண்டாற்றி வரும் அன்னாரின் அருந்தொண்டைப் பாராட்டி மத்திய அரசாங்கம் 'பத்மஸ்ரீ' பட்டமளித்துப் பெருமைப்படுத்தியுள்ளது. கல்வி இலக்கியத் தொண்டைத் தன் உயிர்மூச்சாகக்கொண்டு பணியாற்றிவரும் டாக்டர் கோகக் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா கன்னட நாடெங்கும் கவினுறக் கொண்டாடப்பட்டு வரும் இன்னாளில் நாமும் அவருக்குப் பல்லாண்டு கூறி வாழ்த்துவோமாக.

வரி விளம்பரங்கள்

இப்பகுதியில் வெளியாகும் வரி விளம்பரங்களுக்கு வரி ஒன்றுக்கு ரூ. 0-50 வீதம் வசூலிக்கப்படும். குறைந்த கட்டணம் ரூ. 3-00.

விபரங்கட்கு :

நிர்வாகி, ''நூலகம்''

14. தணிகாசலம் செட்டி ரோடு

சென்னை - 17.

வசதியாகத் தங்குவதற்கு லாட்ஜ்.

நாகர்கோயில் வரும் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான இடம் : ''கைலாஸ் லாட்ஜ்'' பஸ் நிலையம் சமீபம், மீனாட்சிபுரம், நாகர் கோயில் - 1.

Kailas Lodge
Meenakshipuram
Nagercoil - 1
Phone. 239

கல்லூரி, பள்ளி புத்தகங்கள்

உயர் நிலைப் பள்ளி, கல்லூரி, நூலகங்களுக்குத் தேவையான ஆங்கிலம், தமிழ்ப் புத்தகங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

Xcel - Choix
Book Sellers & Publishers
114, Poonamallee High Road
Madras - 29.

நடை

ந. முத்துசாமி

இன்று எல்லாத் துறைகளிலும் முதிய தலைமுறை இளைஞர்களுக்குத் தடையாக உட்கார்ந்து கொண்டிருக்கிறது. இளம் தலைமுறைக்குத் திறமையில்லையென்றும், பக்குவம்போதாது என்றும் அவர்கள் மனதார நம்புகிறார்கள். இளம் தலைமுறையின் செயல்களுக்கு அவர்களால் அர்த்தம் புரிந்துகொள்ள முடிவதில்லை. இன்று உலகம் முழுவதிலும் இளைஞர்கள் முதிய தலைமுறையை எதிர்த்துப் புரட்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இந்தப் புரட்சி திருப்தியின்மையால் ஏற்பட்டது.

நமக்குத் திருப்தி இருக்கிறது என்று சொல்ல முடியாது. திருப்தி இன்மையை உணராமல் இருக்கிறோம் என்று வேண்டுமானால் சொல்லலாம். முதிய தலைமுறையின் மேல் திருப்தி இல்லாதவர்களால் ஆரம்பிக்கப் பட்டதுதான் 'நடை.'

தனக்கு முந்தின தலைமுறை மேல் திருப்தி இல்லாத இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டதுதான் மணிக்கொடி. அவர்கள் பண்டிதர்களிடமிருந்து தமிழ் இலக்கியத்தை மீட்டு வியாபாரிகளின் கையில் கொடுத்து விட்டார்கள். நல்ல தொடக்கத்தைச் செய்தவர்கள் தொடர்ந்த வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்காமல் தங்கள் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போய் விட்டார்கள். மீண்டும் இன்னொரு புதுத் தொடக்கம் செய்ய வேண்டிய வேலை முற்றிலும் இளம் தலைமுறையின்மேல் விழுந்துவிட்டது.

இப்பொழுது புதிய மரபுகளையும் புதிய சமூக மதிப்புகளையும் தோற்றுவிக்கும் காலம் வந்துவிட்டது. இதில் நாம் பின் வாங்கினால் உலகத்தின்முன் தாழ்த்தப் பட்ட வகுப்பினராகி விடுவோம்.

ரசனைக்கு ஒரளவு அனுபவம் தேவை. விமர்சகனுக்குக்கூட

வெறிபிடித்த கணவன்!

ஒருத்தி விவாகரத்துக் கோரி மனுச் செய்து கொண்டாள். அந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. நீதிபதி அந்தப் பெண்ணிடம் காரணம் கேட்டார். அவள் சொன்னாள்: ''அவர் ஒரு வெறிபிடித்த கணவர். இரவில் என்னை நிம்மதியாகத் தூங்க விடுவதில்லை.'' இந்தப் பதிலைக் கேட்டு நீதிபதியின் புருவங்கள் உயர்ந்தன; மேலும் கேட்க முடியாமல் விழித்தார்!

தொடர்ந்து சொன்னாள்: ''ஒவ்வொரு நாளும் நாவல் புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கும்படி வற்புறுத்துவார். அவர் ஒரு கதைப் பைத்தியம். அதிலே அவருக்கு அடங்காத வெறி!'' இந்தப் பதிலைக் கேட்ட பிறகு 'கோர்ட் ஹாலே' பெருமூச்சு விட்டு நிம்மதி பெற்றது.

—'நிலவை சங்கர்'
நிலக்கோட்டை.

புதிதாகச் செய்யப்படும் ஒன்றை உடனே கண்டுபிடித்து அதன் சிறப்பை உணர்ந்துகொள்வது கஷ்டம். அதனால் அபிப்ராய பேதங்கள் தோன்றுகின்றன. இந்த நிலையில் தமிழ் வாசகர்களைக் குற்றம் சொல்வதிலும் அர்த்தம் இல்லை. அவர்களுக்கு யார் ரசிக்கச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்? நமது பள்ளிக்கூடங்கள் சொல்லிக் கொடுத்தனவா? கல்லூரிகள் சொல்லிக் கொடுத்தனவா? அல்லது பத்திரிகைகள் தான் சொல்லிக் கொடுத்தனவா? தீவிர வாசகர்கள் தாமாகவே ரசிக்கக் கற்றுக் கொண்டவர்கள். பள்ளி, கல்லூரிப் படிப்பிற்கு அப்பால் ஆங்கில விமர்சனங்களைப் படிப்பதாலும், உலக இலக்கியத்தைப் படிப்பதாலும், ஏற்கனவே கலை அம்சத்தைக் கண்டு கொண்டவர்கள் சொல்லிக் கொடுத்ததாலும் கற்றுக் கொண்டவர்கள். ஒரு தனி நபர் தன்னைச் சேர்ந்த எத்தனை பேரை தனிப் பேச்சில் ரசிகனாகத் தயாரிக்க முடியும்? அல்லது பொறுமை இருக்கும்? அவன் பெரும்பாலும் தான் படித்து ரசித்துக் கொள்வதிலேயே நின்று விடுவான். அல்லது பிரச்சினை தன்னிடம் மோத வருகிறபோது கோபத்தால் எதிராளியின் ரசனைக் குறைவைச் சுட்டிக்காட்ட தனக்குத் தெரிந்த விஷயங்களைச் சொல்லத் தொடங்கலாம். ஆனால், இந்த விஷயத்தை பத்திரிகையில் அதிகமாகச் செய்ய முடியும். விமர்சனத்தாலும் நல்ல விஷயத்தைப் படிக்கத் தருவதாலும் ரசனையை வளர்க்க முடியும். அறியாமையாலேயே தமிழ் வாசகர்கள் நல்ல விஷயத்தை ஒதுக்கிக் கொண்டிருக்கிறார்கள். சில பிரபல பத்திரிகைகள் படிப்பது அவனுக்கு சிகரெட் பிடிப்பதைப்போல — காபி குடிப்பதைப்போல - பழக்கமாகி விட்டிருக்கிறது. சமயத்தில் அவை அவனுக்குத் தேவையான சுவாரஸ்யம் குன்றி இருந்தாலும் அவைகளை வாங்காமல் படிக்காமல் அவனால் இருக்க முடிவதில்லை. அவை கதை சுவாரஸ்யத்தில் அதிகக் கவனம் செலுத்துகின்றன. அவன் கொஞ்சம் சிந்திக்கத் தொடங்கினால் ஒரு கதைக்கும் இன்னொரு கதைக்கும் அதிக வித்யாசம் இல்லை என்பதைக் கண்டு கொள்வான். ஆனால், அவ்வளவு பொறுமை அவனுக்கு இல்லை. முன்பு படித்த கதையை இன்னொரு பெயரில் படித்துக் கொண்டேயிருக்கிறான். தான் படிக்கிற

நாவல்களும் கதைகளும் திரும்பத் திரும்ப வரும் அடிப்படைக் கதைகள் தான் என்பதை அவன் உணர்ந்துவிட்டால் பிற அம்சங்களில் அவனால் கவனம் செலுத்த முடியும். அப்பொழுதுதான் அவன் சுவாரஸ்யம் என்பது கதையம்சத்தில் மட்டும் இல்லை, இன்னும் பிற விஷயங்களிலும் இருக்கிறது என்று சொன்னால் ஒப்புக் கொள்வான்.

இதனால் சொந்தமாகத் தமிழில் புத்தகம் வாங்கிப் படிக்கும் பழக்கம் தமிழ்நாட்டில் இல்லை என்றே சொல்லி விடலாம். வெகு சிலரே நூல் நிலையங்களில் தமிழ்ப் புத்தகம் எடுத்துப் படிக்கிறார்கள். (அதோடு நூல் நிலையங்களில் தமிழ்ப் புத்தகத்தின் லட்சணத்தை ஆங்கிலப் புத்தகங்களோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும்.) ஆனால், யாரும் படிக்காமலா இருக்கிறார்கள்? சில வாரப் பத்திரிகைகள் பின் எப்படி இரண்டு லட்சம் மூன்று லட்சம் என்று விற்பனையாகின்றன? அவைகளை அவனால் படிக்காமல் இருக்க முடிவதில்லை. 3 லட்சம் பிரதிகள் விற்றால் 10 லட்சம் பேராவது அவைகளைப் படிக்கிறார்கள் என்று சொல்லலாம். அவர்களில் 500 பேர்கூட தரமான விஷயத்தைப் படித்து ரசிக்கிறவர்கள் இல்லை. பிரபல பத்திரிகைகள் ஒருவகைச் சுவையை வாசகர்களிடம் பரப்பியிருக்கின்றன. ஆனால் தரமான விஷயங்கள் அவ்வகையில் பரப்பப்படவில்லை. இது ரசிகர்களின் குறையல்ல. தரமானவை அவர்கள் கையில் கிடைக்கச் செய்யப்படவில்லை, அவை அவர்களுக்குப் பழக்கமாக்கப்படவில்லை. இவை அவர்களுக்குச் செய்தியைக் கொண்டு போகாத நம்முடைய குறைகள்.

இக்குறைகளைப் போக்கும் வகையில் ஆரம்பப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியர்களாக இருப்பவர்களிடமும், தமிழ் சரளமாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் யாராய் இருந்தாலும் அவர்களிடமும் சிற்றேடுகள் அணுக வேண்டும். அவர்களில் ஒரு வருஷத்திற்கு 10 சத வீதம் பேர் தொடர்ந்து அந்த ஏட்டைப் படிக்கக் கூடியவர்களாகத் தயாரிக்க முடியும் என்றாலும் போதும். எனவே இலக்கியச் சிந்தனையே இல்லாதவர்களைக் கூட அணுக வேண்டும். அவர்களைக் கவரும் தந்திரங்களை சிற்றேடுகள் பயன்படுத்தினாலும் பரவாயில்லை. இதன் மூலம் தரமான வாசகர் தொகையை வளர்க்க முடியும்.

உலகம் எவ்வளவோ முன்னேறியிருக்கிறது. அதோடு ஒப்பிடும்போது நாம் மிகவும் பின் தங்கி இருக்கிறோம். இலக்கியத்தோடு சம்பந்தப்பட்ட பிற துறைகளையும் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். தமிழில் வளராத புதுத் துறைகளையும் வளர்க்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக தற்காலப் பாணி ஓவியங்களை தமிழர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். நாடகம் பற்றியும் நாடக அரங்குகளைப் பற்றியும் அறிமுகப்படுத்த வேண்டும். எல்லாவற்றோடும் தமிழில் புது இலக்கியத்தை உலக இலக்கிய அந்தஸ்திற்கு உயர்த்த வேண்டும்.

இவ்வகையில் இன்று பல முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு விஷயத்தை ஒருவரே சொல்லிக் கொண்டிருப்பதை விட ஒரு விஷயத்தைப் பலர் சொல்லும்போது அதற்கு மதிப்பு வந்து

நூலக முன்னோடிகள்

ரோபக் (ஜியார்ஜ் எட்வர்ட்)

(1877-1953)

பிரிடிஷ் நூலகர். இங்கிலாந்தில் பொது நூலகச் சட்டம் 1919ல் நிறை வேற்றப்பட்டது. இவரது முயற்சியால் இது சட்டமாக்கப்பட்டது. இதற்காக, இவர் காண வேண்டியவர்களைக் கண்டு சொல்ல வேண்டியதைச் சொல்லி, பெற வேண்டியதைப் பெற்ற செயல் வீரர்.

இங்கிலாந்தில் பொது நூலகங்கள் இணைந்து செயலாற்றுவது இந்தச் சட்டத்தினால் தான் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

விடுகிறது. மதிப்புள்ளவற்றை இன்று பலர் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். 1930ல் தோன்றிய விழிப்புணர்ச்சியில் பிறந்த விமர்சகர்களைவிட 1960ன் விழிப்புணர்ச்சியில் தோன்றிய விமர்சகர்களின் எண்ணிக்கை அதிகம். ஏதாவது ஒரு மூலையில் இவர்கள் குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இதில் ஒரு குரல் 'நடை'. இன்னும் பல குரல்களை ஒலிக்கச் செய்ய வேண்டும். நடையின் பக்கங்களில் அவர்களுக்கு இடம் தயாராய் இருக்கிறது.

பல காரணங்களுக்காகத் தரமானவைகளை பத்திரிகைகள் மறுத்துக் கொண்டிருக்கின்றன. தங்கள் பத்திரிகையின் தரத்தைவிட அதிகத் தரமுள்ளதாக இருப்பதற்காகவே மறுக்கப்படுவதோடு, மடுசஞ்சித்தனமாகவும் மறுக்கப்படுகின்றன. இவைகளுக்கு ஒரு இடம் கொடுத்து வெளியில் தெரிய வைக்க வேண்டிய வேலையும் இருக்கிறது. சொல்ல நினைத்ததைச் சுதந்தரமாகச் சொல்ல எழுத்தாளனுக்கு ஒரு சாதனம் இல்லாத குறையை நிவர்த்திக்க வேண்டும்.

கட்டுரைத் தொடக்கத்தில் சொன்னபடி, — இப்பிரச்னைகளை உணர்ந்துள்ள—நடையில் ஈடுபட்டிருப்பவர்கள் இது வரையில் எழுதியிருப்பவர்கள் எல்லோருமே 35 வயதுக்கு உட்பட்டவர்கள். அதற்குக் குறைந்த வயதினரே அதிகம் பேர். சிலவற்றில் நமக்கு முதிர்ச்சி சீக்கிரமாகவும் சிலவற்றில் காலம் தாழ்த்தியும் வருகிறது. குடும்பப் பொறுப்புகளில் நம் நாட்டினருக்கு வளர்ச்சி விரைவில் வந்து விடுகிறது. அறிவு வளர்ச்சியில் முதிர்ச்சி மிகவும் பின் தள்ளி வருகிறது. சமயத்தில் வராமலேயே போய் விடுகிறதோ என்றும் தோன்றுகிறது. நடையில் இது வரையில் எழுதியிருப்பவர்கள் எல்லோருக்கும் இலக்கிய முதிர்ச்சி சிறு வயதிலேயே வந்திருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

ஆக, 'நடை'மேற்கண்ட குறைகளைப் போக்கவும், புதிதாகச் சாதிக்கவும், எல்லாவற்றிலும் பிரக்ஞையோடு செயல்படவும் முயல்கிறது. 'நடை' தான் மேற்கொண்டிருக்கும் பணியில் எவ்வளவு தூரம் வெற்றிபெறப் போகிறது என்பதற்குப் பதில் சிறிது காலம் பொறுத்திருந்து தான் தெரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக வாசகர்கள் இதைக் கவனித்து வரவேண்டும்.

[நடை - இலக்கிய முத்திங்கள் ஏடு, ஆண்டுச் சந்தா ரூ 3-00
7, வெங்கட்ராயர் தெரு
சென்னை-3]

உரிமைப் பிரச்சினை

குளச்சல் **தங்கவேல்** B. Sc., B. L. Sc.

நூல்—அறிவு: நூலகம்—அறிவின் இருப்பிடம்; நூலகர்—அறிவின் வழிகாட்டி. வழிகாட்டியின் வாழ்க்கையிலே எத்தனை இன்னல்கள்? அறிவிற்கு வழி காட்டுபவர்களுடைய வாழ்வுக்கு வழிகாட்டப்படவில்லை. அவர்கள் கேவலமாக நடத்தப்படுகிறார்கள். அவர்களது உரிமைகள பறிக்கப்படுகின்றன. உரிமையைக் கேட்டால் ஊதாரி என்கிறார்கள். சட்டம் கேட்டால் சட்டாம் பிள்ளை என்கிறார்கள். இத்தகைய அவல நிலைதான் என்ன?

அடிப்படை ஊதியத்தை ரூபாய் 200லிருந்து 300க்கு அதிகப்படுத்து என்கிறோம். அடிப்படையை உயர்த்தா விட்டாலும் பரவாயில்லை, எங்களை அடிமைப் படுத்தாமலிருந்தாலாவது போதும். அவமானம், இன்னல்—அது என்ன? எப்படி நேர்ந்தது என்பீர்கள்.

அடிப்படை ஊதியத்தை ரூபாய் 225-10-275-15-425 லிருந்து 200-10-300க்கு மாற்றி குறைத்திருக்கிறார்கள். ஏனைய கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய விகிதத்தை எல்லாம் கூட்டி விட்டு, நூலகர்களின் தலையில் மட்டும் கைவைப்பது நியாயமா? எந்த அலுவலகத்தையெடுத்தாலும் உத்தியோக உயர்வு இருக்கிறது. உதவிப் பேராசிரியர்—பேராசிரியராகிறார், கல்லூரி முதல்வராகிறார், கல்வி அதிகாரியுமாகிறார். இத்தகைய, உத்தியோக உயர்வு இருக்கின்ற உதவிப் பேராசிரியர்களுடைய சம்பள விகிதம் அடிப்படை 300-25-600-லிருந்து உயர்ந்து கொண்டே போகிறது. ஆனால், நூலகர்களின் நிலையோ—உத்தியோகத்திலோ உயர்வுக்கு வழி காண வில்லை. என்றும் அவர்களுடைய நிலையிலே மாறுதலுக்கு வழியில்லை. நூலகராக வேலைக்கு வரக் கூடியவர், நூலகராகவே வேலையை விட்டு வெளியேறுகிறார். (Join as Librarian and Retire as Librarian) அவர்

நூலக முன்னோடிகள்

பேயர்ஸ் (டபிள்யு சி எபர்விக்)

(1881-1960)

உலகல் நூலக தொழில் முன்னேற உழைத்த உத்தமர். பிரியடீஷ் நூலகர். உலகில் பிரசித்தி பெற்ற பல்வேறு நூலகர்களும் இவரின் மாணவர்களே. இப்போது புரிகிறதா இவரின் நூலகப் பணியின் சிறப்பு?

'நூலகப் பகுப்பு முறை கையேடு' என்ற இவரின் நூல் நூலக இயலின் நவீன 'காவியமாகும்.' சிறப்பு மிக்க நூலகர் அறிஞர் இவர். இவர் சேவையால் நூலகத் தொழில் நாளும் வளர்ந்துள்ளது. நூலகர்கள் என்றும் இவருக்கு நன்றி சொல்ல கட்மைப் பட்டுள்ளனர்.

களுடையசம்பளவிகிதமோ 200-10-300-டன் முடிந்து விடுகிறது. பத்து ஆண்டுகளில் அவர்கள் அடிப்படை ஊதியத்தின் முதுமையை (300) அடைந்து விடுகிறார்கள். பின் அவர்கள் எத்தனை வருடங்கள் உழைத்தாலும் அதே ஊதியத்தையே பெறுகிறார்கள். வாழ்க்கை சோர்ந்து விடுகிறது. உத்தியோகத்திலே உயர்வைக் காண முடியாத நிலையிலே, ஊதியத்தையாவது உயர்த்திக் கௌரவித்தால் நூலகர்களின் உள்ளம் உவகை பூக்கும்; குடும்பத்தில் குதூகலம் பொங்கும்.

உரிமைப் பிரச்னைகளிலே மிக முக்கியமான ஒன்று-நூலகர்கள் தரம் தாழ்த்தப்படுகிறார்கள் என்பது. அரசினர் கலைக் கல்லூரிகளை ஆரம்பிக்கின்ற நிலையிலே, நூலக வேலைகளைக் கவனிப்பதற்காக S.S.L.C படித்த ஒருவரை (Clerical assistant) நியமித்து, அவரை மேற்பார்வையிடுவதற்காக ஒரு பேராசிரியரையோ அல்லது உதவிப் பேராசிரியரையோ நியமிக்கிறார்கள். இவர்கள் "Library in Charge" என்ற பட்டப் பெயரோடு நூலக அறிவற்ற Clerical Assistant-ஐ அதிகாரம் செய்து காலத்தைக் கடத்துகிறார்கள். இருவருமே நூலக அறிவு அற்றவர்களாதலால் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள் என்று அதை நாம் விட்டுவிடலாம்.

ஆனால் அதே நிலையை நூலகத் துறையிலே முழுமையான பயிற்சி பெற்ற நூலகர்கள் (Qualified Librarian, B. A. B. L. Sc or B.Sc. B.L.Sc) நூலகராக நியமிக்கப் பட்ட பிறகும், நூலகத் துறையிலே எந்த விதமான பயிற்சியும் பெறாத (Technically Unqualified) ஒரு பேராசிரியரை அல்லது உதவிப் பேராசிரியரை நூலக மேற் பார்வையாளராக (Library in Charge) நியமித்து, அவர்களைத் தவறான முறையிலே நூலகர்களின் மேல் அதிகாரம் செலுத்தவிடுவது தரம் தாழ்த்தும் செயலும் வருந்தத் தக்கதுமாகும். இத்தகைய முறை தமிழக அரசு நியதியில் உள்ளதோ அல்லது நூலகர்களைத் தரம் தாழ்த்தவேண்டுமென்று கல்லூரி முதல்வர்கள் செய்கின்ற செயலோ தெரியவில்லை. கல்லூரி முதல்வருக்கும் நூலகருக்குமிடையிலே நூலக மேற்பார்வையாளர் (நூலக அறிவற்றவர்) தேவையில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிலைமை தரம் தாழ்த்தும் உரிமைப் பிரச்சினையாகத் தென்படுகிறது.

உரிமைப் பிரிச்சினையிலே இன்னொன்றையும் கூற ஆசைப்படு

கிறேன். கல்லூரிகளிலே ''College Council'' — என்று ஒன்று ஆண்டு தோறும் கூட்டப் படுகிறது. அதிலே எல்லாத் துறையினுடையவும் தலைவர்கள் (Heads of the Departments) பிரதிநிதியாக இருப்பார்கள். துறைத் தலைவர்கள் பேராசிரிய ராக இருந்தாலும் சரி அல்லது உதவிப் பேராசிரியராக இருந்தாலும் சரி பிரதி நிதித்துவம் கொடுக்கப்படுகிறது. இவர்களைத் தவிர நூலகர்களைப் போல் ஒரே அடிப்படையிலே ஊதியம் பெறும் உடற்பயிற்சி ஆசிரியரும் (Physical Director) அங்கத்தினராகச் சேர்க்கப்படுகிறார். ஆனால், அதே சமயத்திலே, நூலகர்— நூலகத் துறையிலே தலைவர்கள் —அங்கத்தினராகச் சேர்க்கப்படுவதில்லை. கல்விக்கு அடிப்படையாக அறிவு வளர்ச்சியைத் தூண்ட தூண்டுகோலாக இருக்கின்ற நூலகர்களுக்குக் College Council—லில் பிரதிநிதித்துவம் கொடுக்கவில்லையென்றால் இதை விட தரம் தாழ்த்தும் செயல் வேறு வேண்டுமா என்று கேட்கத் தோன்றுகிறது?

ஒவ்வொரு வருட இறுதியிலும் தேர்வு (Examination) நடக்கின்றது. தேர்வை மேற்பார்வையிட எல்லாத் துறையினுடையவும் ஆசிரியர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அதிலே பேராசிரியர் என்றோ, துணை ஆசிரியர் (Tutor) என்றோ வித்தியாசம் இருப்பதில்லை. இத்தகைய மேற்பார்வையிலே (Invigilation work) உடற்பயிற்சி ஆசிரியரும் (Physical Director) சேர்க்கப் படுகிறார். ஆனால் நூலகர்கள் (Librarians) மேற்பார்வை வேலைக்கு வருகிறார்களா, இல்லையா? என்பதைக் கேட்பதும் இல்லை; வருகிறேன் என்றால் சேர்ப்பதும் இல்லை. ஒரு சில தனியார் கல்லூரிகளிலே நூலகர்களுக்குத் தேர்வு மேற்பார்வைத் தொழில் (Supervision work) கொடுக்கப் படுவதாகக் கேள்விப்படுகிறேன். இது வரவேற்கத் தக்கது. இத்தகைய நிலையை ஏனைய கல்லூரிகளும் கடைப் பிடித்து நூலகர்களுடைய குறையை நீக்கி தரம் தாழ்த்தும் முறையை மாற்றினால் போற்றற்குரியது.

கல்லூரிகளிலே தமிழ்ப்பேரவை (Tamil Association), Fine Arts Association, Athelitic Association என்பன போன்ற பல பேரவைகள் செயல்படுகின்றன. ஆனால் அறிவை விருத்தியடையச் செய்ய, அதன் வேலைகள் ஒழுங்காக நடக்கின்றனவா, மாணவர்களுக்கு எத்தகைய முறையிலே பயன்படுகிறது என்பனவற்றைக் கவனிக்க Library Association— என்று ஒன்று வேண்டாமா? கண்டிப்பாக அப்படி ஒன்று இருந்தால்தான் மாணவர்களுக்கும் நூலகத்திற்கும் நட்பு ஏற்பட ஏதுவாகும். அந்த நட்பு அறிவை வளர்க்கும். அறிவின் வளர்ச்சியிலே கல்லூரிக்கும், பின் நாட்டிற்கும் பெருமை வருகின்றது. எனவே, ஒவ்வொரு கல்லூரியிலும் Library Association கண்டிப்பாக அமைக்கவேண்டும். அதன் மூலம் மாணவர்களுக்கும் நூலகத்திற்குமுரிய தொடர்பு வளர வேண்டும்.

மேற் குறிப்பிட்டவை போன்ற இன்னும் பல உரிமைப் பிரச்சினைகள் உள்ளன. சில கல்லூரிகளிலே கல்லூரி முதல்வர்கள் நூலகர்களை குமஸ்தாக்களை (Clerk) நடத்துவதுபோல் தரக் குறைவாக நடத்துகிறார்கள். இத்தகைய தரம் தாழ்த்தும் நிலை மாற வேண்டும்; அன்றேல் மாற்றப்படவேண்டும். மேலை நாடுகளைப்போல் நூலகர்கள் மதிக்கப்படவேண்டும். ○

பிரிட்டனில் நூல் பதிப்பும், படிப்பும்

1476 கேக்ஸ்டன் தன் அச்சகத்தை வெஸ்மினிஸ்டரில் ஸ்தாபித்தார். நூல்களை அச்சேற்றினர். (இங்கிலாந்து, வேல்ஸ் மக்கள் தொகை சுமார் 4.7 மில்லியனுகும்)

1510 13 பல்வேறு வகை நூல்கள் வெளியிடப்பட்டன.

1600 150 நூல்கள் வெளி வந்தன. பொது மக்களுக்கான துண்டுப் பிரசுரங்கள், ஆண்டு ஆல்மனக்ஸ் முதலியவற்றை 100க்கும் மேற்பட்ட அச்சக நிறுவனங்கள் அச்சிட்டன. (இங்கிலாந்து, வேல்ஸ் மக்கள் தொகை சுமார் 4.8 மிலியன்)

1622 'வீக்லி நியூஸ்' தோன்றியது. இங்கிலாந்தில் தொடர்ந்து அயல் நாட்டுச் செய்திகளின் தொகுப்பைத் தாங்கி வெளியான முதல் செய்தி பருவ ஏடு இது.

1702 டெய்லி கௌரண்ட், முதல் நாளிதழ் இங்கிலாந்தில் வெளி வந்தது. (இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து மக்கள் தொகை சுமார் 6.5 மிலியன்)

1750 1750—1775க்கு மிடையே பருவ ஏடுகளின் விற்பனை இரட்டிப்பாகியது. நாவல்கள் அதிகமாக வெளிவந்தன. 1750—1800க்கு மிடையே நூல்களின் விற்பனை 10 மடங்காகப் பெருகியது. நூல்களின் திறனுய்வுகள் வெளி வரத் தொடங்கின. (இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து மக்கள் தொகை 7.7 மிலியன்)

1785 'டெய்லி யுனிவர்சல் ரிஜிஸ்தர்' என்ற பெயரில் 'டைம்ஸ்' ஸ்தாபிக்கப்பட்டது.

1800 ஆண்டு ஒன்றுக்கு 600 நூல்கள் வெளி வந்தன. (இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து மக்கள் தொகை 11 மிலியன்)

1814 'தி டைம்ஸ்' கைகளினுலேயே அச்சு அமைப்பு உருவாஞலும், நீராவி சக்தியினுல் இயங்கிய யந்திரத்தினுல் அச்சடிக்கப் பட்டது.

1820 தொடர் நாவல்கள் வெளிவரத் தொடங்கின. 1837ல் சார்லஸ் டிக்கன்ஸின் 'பிக்விக் பேப்பர்' ஒரு பதிப்பில் 40,000 பிரதிகள் விற்றன. (இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து மக்கள் தொகை 14.4 மில்லியன்)

1836 'சண்டே நியூஸ் ஆப் தி வொர்ல்ட்' முதன் முதலாக வெளி வந்தது.

1850 எண்பதுக்கு ஒருவர் தின இதழ்களையும், இருபதுக்கு ஒருவர் ஞாயிறு இதழ்களையும் படித்தனர். டபுள்யு. எச். ஸ்மித் புகை வண்டி நிலையங்களில் புத்தகக் கடைகளை நிறுவினுர். நாவல்கள், 'ஷில்லிங் நூல்கள்', 'எல்லோ பேக்ஸ்' நூல்களின் மக்கள் பதிப்புகள் மலிவு விலையில் வெளி வரத் தொடங்கின. (இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து மக்கள் தொகை சுமார் 21 மிலியன்)

1870 தொடக்கக் கல்விச் சட்டம் வந்தது. 1800—ல் கல்வி கட்டாய மாக்கப்பட்டது. பள்ளிக்குச் செல்வது வற்புறுத்தப் பட்டது.

1872 இயந்திரங்களினுல் அச்சுக் கோக்கப்பட்டன. பத்தாண்டுகளுக்குப் பின் அமெரிக்கலினேடைப் முறையில் அச்சு கோக்கப் பட்டது.

1881 ஜியார்ஜ் நியூன்ஸ் 'டிட்-பிட்ஸ்'ஐ வெளியிட்டார். ஒவ்வொரு இதழும் 8 லட்சம் பிரதிகள் வரை விற்பனையாயிற்று.

1896 ஆல்பிரட் ஹார்ம்ஸ் வொர்த்தும் (பிறகு லார்ட் நார்த் கிளிப்பும்) 'டெய்லி மெயிலை' வெளியிட்டனர்.

1900 ஆண்டு ஒன்றுக்கு 6000 புத்தகங்கள் வெளி வந்தன. சிறப்பு நூல்களின், அடுத்தடுத்த பதிப்புகளும் இக்கணக்கில் அடங்கும். இக்காலத்தில் ஐந்தில் ஒருவர் தின இதழ்களையும், மூன்றில் ஒருவர் ஞாயிறு இதழ்களையும் படித்தனர். (பிரிட்டிஷ் தீவுகளின் மக்கள் தொகை சுமார் 41.5 மிலியன்)

1904 'டெய்லி மிரர்' ஸ்தாபிக்கப்பட்டது.

1965 26,300 புத்தகங்கள் வெளிவந்தன. தினமும் தேசிய நாளிதழ்கள் $15\frac{1}{2}$ மிலியனும், ஞாயிறு இதழ்கள் 23.75 மிலியனும் விற்பனையாயின. இத்தருணத்தில் வெளி வந்த பல்வேறு வகைப்பட்ட பருவ ஏடுகளின் மொத்த எண்ணிக்கை 4400க்கும் அதிகம். வாரம் ஒன்றுக்கு மக்கள் பதிப்பு நூல்கள், மலிவு விலையில் இரண்டு மிலியன் பிரதிகள் வரை விற்பனையாகின.

— தொகுப்பு: 'மெய்யூரான்'

இங்கிலாந்தில் முக்கிய தேசீய ஞாயிறு, நாளிதழ்கள்

(சில புள்ளி விபரங்கள்)

பெயர் உரிமையாளர்	விற்பனை (1965 டிசம்பர் கணக்குப்படி)	விளம்பரம் (முதல் தலையங்கம் வரை சராசரி சதவிகிதத்தில்)	சத விகிதத்தில்: செய்திகள்	சத விகிதத்தில்: கட்டுரைகள் பிற அம்சங்கள்	சத விகிதத்தில்: படங்கள்	செய்திகள் சத விகிதத்தில்: அரசியல், சமூக, பொருளாதார, கலை	செய்திகள் சத விகிதத்தில்: வாழ்க்கை வரலாறு	செய்திகள் சத விகிதத்தில்: குற்றம் நாசங்கள் முதலியவை	செய்திகள் சத விகிதத்தில்: விளையாட்டுகள்
நியூஸ் ஆப் தி வொர்ல்ட் — நியூஸ் ஆப் தி வொர்ல்ட் லிமிடெட்	6,334,000	33	67	27	6	20	5	36	39
பீபிள் — ஐ.பி.சி. (மிரர் குரூப்)	5,578,000	40	52	35	13	13	4	38	45
சண்டே மிரர் ,,	5,064,000	30	50	26	24	25	11	13	51
டெய்லி மிரர் ,,	4,844,000	33	45	26	29	31	17	14	38
சண்டே எக்ஸ்பிரஸ் — பீவர் புருக் நியூஸ் பேப்பர்ஸ்	4,357,000	49	40	40	20	43	11	11	35
டெய்லி எக்ஸ்பிரஸ் — பீவர் புருக் நியூஸ் பேப்பர்ஸ்	4,317,000	34	62	20	18	38	3	17	42
டெய்லி மெயில் — அசோசியேடட் நியூஸ் பேப்பர்	2,473,000	32	55	19.5	25.5	45	8	12	35
சன் — ஐ.பி.சி. (மிரர் குரூப்)	1,400,000	25	48	35	17	51.5	19	9.5	20

டெய்லி டெலிகிராப் டெய்லி டெலிகிராப் லிமிடெட் (பெர்ரி குடும்பம்)	1,305,000	48	61	25	14	57	5	3.5	34.5
சண்டே டைம்ஸ் தாம்ஸன் நியூஸ் பேப்பர்ஸ்	1,181,000	49	50	36	14	61	9	1	29
டெய்லி ஸ்கெட்ச் அசோசியேடட் நியூஸ் பேப்பர்ஸ்	934,000	10	49	38	13	33	17	14	36
அப்சர்வர் அப்சர்வர் லிமிடெட் (ஆஸ்டர் டிரஸ்ட்)	713,000	46	49	40	11	71	6	1	22
சண்டே டெலிகிராப் டெய்லி டெலிகிராப் லிமிடெட் (பெர்ரி குடும்பம்)	656,000	33	55	31	14	64	3	2	31
கார்டியன் கார்டியன் டிரஸ்ட்	261,000	39	64	26	10	70	1	1	28
டைம்ஸ் டைம்ஸ் பப்ளிஷிங் கம்பெனி (டிரஸ்ட்) சண்டே டைம்ஸுடன் இணைப்பு (தாம்ஸன் நியூஸ் பேப்பர்ஸ்)	254,000	32	74	15	11	70	6	1	23

— தொகுப்பு : ''அண்ணாமலையான்''

நூலிழப்பு ஏன் ஏற்படுகிறது?

வே. சந்திரசேகரன் C. L. Sc.

ஆசிரியரவர்களுக்கு,

தமிழகத்தில் மறுமலர்ச்சி பெற்று வரும் நூலக இயக்கத்தின் வேர்களாகப் பரவிக் கிடக்கும் நூலகர்களின் கருத்துக்களை ஒட்டு மொத்தமாகச் சேகரித்து வெளியிட முன் வந்த 'நூலகத்திற்கு' நன்றி.

மாநில நூலக இயக்குநர் அவர்களின் விருப்பப்படி நடத்தப் பெறும் 'திறவை' (open access) முறையினுல் நூலகங்களில் புத்தகங்கள் காணுமல் போகின்றன.

திறவை முறை வைப்பதற்கு முன், நூலக இயலின்படி நூலகக் கட்டிடம், சன்னல் மற்றும் விக்கேட் கேட் அமைப்புக்கள் பொது நூலகங்களில் செய்யப் பட வில்லை.

வாசகர்கள் புத்தகத்தைத் திருடுகிறுர்கள் எனச் சொல்வதைவிட, அபரிமிதமான ஆசையில் தவருதக் கொண்டு செல்வதும், குறைந்தபட்ச உறுதிப் பணத் தொகை கட்ட முடியாத வாசகர் புறம்பான வழியில் நூலகத்தை அனுபவிக்க முயல்வதும் வலுவான காரணங்களாகக் கருத வேண்டியதுடன், கலாச்சாரக் குறைவுகளும் காரணமாகும். நூலக இயக்கம் இந்தப் பிரச்சினையில் எதிர்நீச்சல் போட வேண்டி யிருக்கிறது.

வாசகர்கள் புத்தக இருப்பு அறைக்குச் சென்று ரேக்குகளுக்கு மறைவில் என்ன செய்கின்றுர்கள் என ஒவ்வொருவரையும் கண் காணிக்க இயலாததுடன், தரமான வாசகர்களையும் அது மனம் நோகச் செய்கின்றது.

எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி பொது நூலகத்தில் நுழையும் வாசகரை வெளியே செல்லும் போது தொழிற்சாலைகளில் தொழிலாளியைச் சோதனையிட்டு ஒரு பயத்தை ஏற்படுத்தியிருப்பதைப் போல் நூலகர்கள் செய்ய இயலவில்லை.

சில பொது நூலகங்களில் பிடிக்கப்பட்ட புத்தகத் திருடர்களை செய்திப் பேப்பர்களில் வெளியிட்டுத் தீய வாசகர்களை பயமுறுத்தாததுடன், அந்தப் புத்தகத் திருடர்கள் மீது இலாக்கா தொடர்ந்த வழக்குகள் ஆரம்பித்த கதியில் வேகம் செல்வதில்லை. அத்துடன் நூலக இயக்கத்தைப் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் கருதாமல், புத்தகத் திருடனின் சுய வாழ்க்கையை பார்க்கின்றுர்கள். இவன் மாணவனுக இருந்தால் அவனது பள்ளி வாழ்க்கை, எதிர்காலம்; பிற உத்தியோகஸ்தர்களாக இருப்பின் அவர்கள் பெறும் ஊதியம், பென்சன் ஆகிய யோக்கியதாம்சங்கள் கவ

னிக்கப்படுவதால் வழக்கில் தீவிரம் காட்டாததுடன், தீர்ப்புகளை எதிர்த்து தொடர் நடவடிக்கையும் எடுப்பதில்லை. நூலகருடன் ஒத்துழைக்க இராமநாதபுரம் மாவட்டம் வத்ராயிருப்பில் ஏற்படுத்தி இருப்பது போல் வாசகர் அரங்குகள் ஏற்படுத்தி, நூலகர்—வாசகர் தொடர்பில், புத்தக இருப்பினைக் கவனிக்கும் இரு கண்களாகச் செயலாற்றலாம்.

கவனமுள்ள நூலக ஊழியர்கள் பணி புரியும் அறிவாலயத்தில் நூல்கள் குறைகின்றன. நூலக இயக்க வளர்ச்சி எதிரிகளான தரமற்ற வாசகரின் திருட்டைத் தவிர, நூலக ஊழியர்கள் சிலரும்கூட 'வேலியே பயிரை மேயும்' கதையும் இருக்கலாம் என்ற நிர்வாகத்தின் முடிவுப்படியும் வேறுவிதப் பரிகாரம் காணுமல், எல்லா ஊழியருக்கும் (Recovery) பிடித்தம் வந்துவிட்டது. எனவே எப்படியும் ஈடு கட்ட வேண்டிய நிலையில், நூலக ஊழியர்களுக்கு மாற்றுச் சந்தர்ப்பங்களும் இல்லை.

காணுமல் போகும் புத்தகங்களை மீண்டும் அந்த வட்டாரத்தில் உள்ள பழைய புத்தகக் கடையிலும், சந்தேகிக்கும் நபர்களின் வீடுகளிலும் இருக்கின்றதா என்பதைத் திடுமென சோதனையிட அதிகாரமும், காவல் துறையினர் ஒத்துழைப்பும் வேண்டும்.

ஒன்று, அல்லது இரண்டு விகிதம் வைத்துக் கொண்டு அல்லது வாசகர் நூலகர் நலங் கருதி முழுமையான தொலைவுகளை தள்ளுபடி (Right off) செய்யலாம். இவை ஏற்கனவே சென்னைப் பல்கலைக் கழக நூலகம், மதுரைப் பொறியியற் கல்லூரி நூலகம், மதுரைப் பல்கலைக் கழக நூலகம், இன்னும் பல கல்லூரி நூலகங்களில் நடைமுறையில் உள்ளது. அத்துடன் ஒரு சில மாவட்டங்களில் கிளை நூலகரின் நடத்தையைப் பொருத்தும், அவருக்கு ஏவலர் நியமிக்கப்படாத குறையினுலும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

காணுமல் போகும் புத்தகங்களின் மதிப்புத் தொகையை அந்தந்த நூலகத்தில் உள்ள மொத்தம் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஈடு செய்து கொள்ள நூலகருக்கு அதிகாரம் அளிக்கலாம்.

அவற்றை 'ஈடு கட்டும் செலவாக' ரசீதுகள் தரப்பட்டு வசூலித்த தொகையை, புத்தகம் வாங்கி வைத்துவிட அறிவிப்பு செய்ய வேண்டும். அந்தத் தொகையை அலுவலகத்திற்கு அனுப்பும்படி கேட்கப்படக் கூடாது.

உதாரணமாக, ஒரு பொது நூலகத்தில் 900 உறுப்பினர்கள் இருந்தால் 1965-ம் ஆண்டு 60—ரூபாய் பெறுமான புத்தகம் காணுமல் போயிருப்பதாக இருந்தால், 60 ரூபாய் புத்தகத்திற்கு கமிஷன் போக 45 ரூபாய் வசூலிக்க வேண்டும். 900 உறுப்பினர்களிடம் தலைக்கு 50 பைசா வீதம் வசூலிக்கலாம். இம்மாதிரி சென்னை லேடி வில்லிங்டன் நூலகத்தில் ஈடு கட்டுவதாகக் கேள்வியுற்றேன். உறுப்பினர்கள் தந்துதான் ஆகவேண்டும் என்பது கட்டாயமல்ல என்பதையும்கூட அறிவித்து விடலாம்.

சேதாரச் செலவு என்ற கணக்குப்படி, அதிகப்படியான உபயோகத்தில் உள்ள புத்தகத்தின் ஆயுட் கால அளவு, முழுமையாகப் பயன்படும் ஆண்டுகள் நிர்ணயிக்கப்பட்டு, அதன் பிறகு அவை 'மார்கட் ரேட்' இழந்து

விட்டதாக அறிவிப்பு செய்து விடலாம். மருந்துக்கும், ஆயு தங்களுக்கும் (Tools) உபயோ கிக்கும் கடைசி நாளை அவற்றில் குறிப்பிடுகிறார்களே அது போல! அதன் பிறகு தொலைந்து போனால் குறைந்தபட்சமாக காகித நிறுவை அளவுதான் வசூ லிக்கலாம்.

தேய்மானம் கொஞ்சம் கொஞ்சமாக புத்தகத்தை பாதிப் பது போல அதன் விலையும் கொஞ்சம் கொஞ்சமாக, ஆண் டுக்கு ஆண்டு இல்லாவிட்டால் இத்தனை வழங்கல் (Issues) என்ற கணக்கில் அதன் மதிப்பு குறைக் கப்பட வேண்டும்.

பேப்பரால் செய்யப்பட்ட புத் தகங்கள் நிலைத்தவை (Records) களாக இருக்க முடியாது. அப்படிக் கழிவு நீக்கம் என ஒவ் வொரு ஆண்டும் சில நூல்கள் தள்ளப்படுகின்றன. அதற்கு (Recovery) இல்லை. ஆனால், அவை புத்தக இழப்பாகவும் கரு தப்படுவதில்லை. அது போலவே கழிவு நீக்கத்திற்கு முந்நிலைதான் சேதாரப் புத்தக ரேட்!

வாசகர் அரங்கம் வழியாக, அறக் கொடையாளரிடம் நன் கொடையாகத்தொலைந்துபோன புத்தகங்களை அறிவித்து அவற் றைப் பெறலாம். தக்க பிரச் சாரங்கள் செய்யப்பட வேண் டும். அதற்கான புத்தக வெளி யீடுகள் வெளியிடவும், குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப் போன்று பிரச்சாரமும் வேண் டும். இதற்கான திரைப் படங் கள் தமிழக அரசுச் செய்தித் துறையும், இந்திய பிலிம் டிவிஷ னும் தயாரித்துத்திரையிடவேண் டும். அமெரிக்க, சோவியத் நூலகங்களில் நூலக வளர்ச்சிக்கு முந்திய ஆரம்ப காலங்களில் செய்தபரிகாரம்கண்டு-அவற்றை இந்திய நூலகக் கமிட்டி ஏற்றுக் கொள்ளுமா என்பதையும் பரிசீ லிக்கலாம். ○

நீங்கள் எழுதிவிட்டீர்களா ?

ஆகஸ்ட் ''நூலகம்'' இதழில் நூலகர்களுக்கான 'பரிசுத்திட் டம் வெளியிட்டோம். பதினைந்து தினங்களில் பல நூலகர்களிட மிருந்து ஏராளமான கட்டுரைகளும், கடிதங்களும் வந்து குவிந்துள் ளன. நாங்கள் எதிர்பார்த்ததைவிட நூலகர்கள் அதிகச் சுறுசுறுப் புக் காட்டியுள்ளனர். ஆனால் 250 வார்த்தைகளுக்கு மிகாமல் கடி தங்களாக இருக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தும் பெரிய பெரிய கட்டுரைகளாக எழுதியனுப்பி யிருக்கிறார்கள்.

ஆயினும் எங்களுக்கு வந்து சேர்ந்த கட்டுரைகளில் சிறந்ததான ஒன்றைப் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுத்து ''நூலிழப்பு ஏன் ஏற் படுகிறது?'' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம். அதற்குரிய சன் மானத் தொகை ரூ. 10-00ம் செப்டம்பர் முதல் வாரத்தில் அனுப்பி வைக்கப்பெறும்.

மற்ற தலைப்புக்களில் கடிதமாக, ''நூலகம்'' இதழில் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் நூலகர்கள் எழுதியனுப்பலாம்.

நிபந்தனைகள் வழக்கம்போல்!

—ஆசிரியர்

செய்திகள்

கன்னிமாராப் பொது நூலகம்

1969 ஜூலை மாதத்தில் கன்னிமாராப் பொது நூலகத்தில் 71 புதிய உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். மொத்த உறுப்பினர்களின் தொகை 7360 ஆகும். 14,000 வாசகர்கள் 42,000 நூற்களைப் பயன்படுத்தியுள்ளனர். 10, 192 நூற்கள் வாசகர்களால் வீடுகளுக்கு எடுத்துச் சென்று படிக்க அனுமதிக்கப்பட்டன.

சேலம் வாசகர் அரங்கு

சேலம் மாவட்ட வாசகர் அரங்கின் ஜூலை மாதக் கூட்டம் 20-7-69 ஞாயிறன்று சேலம் மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில் நடைபெற்றது. மாதந்தோறும் மூன்ருவது ஞாயிற்றுக்கிழமை இவ்வரங்கின் கூட்டத்தை நடத்த சேலம் நகர் கிளை நூலகத்தில் இடம் பெற விண்ணப்பித்துக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

6-7-69 ஆனந்தவிகடன் இதழில் வெளியான வாசவன் அவர்களின் ''மொட்டுகள்'' என்ற சிறு கதையைப் பற்றிய ஒரு மனதான ஆய்வுரையொன்றை உருவாக்கினர். பாத்திரப் படைப்புக்கள் ஒவ்வொன்றும் அழகாய் அமைந்தது என்ருலும், ராஜி-பாலு என்ற இரு சிறுவர்களின் வாயிலாக வயதிற்கு மிஞ்சிய தத்துவங்களையும் வர்ணனைகளையும் புகுத்தியது மனோதத்துவ ரீதியில் ஒவ்வாததுஎன்று கருதப்பட்டது. அடுத்த கூட்டத்தில் ஆய்வதற்கு 14-4-69 ல் ஆனந்தவிகடனில் வெளியான ''மூடிக் கிடந்த ஒரு வீடு'' என்ற சிறு கதை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஊத்துக்குளி

27-7-69 ஞாயிறு இரவு ஊத்துக்குளி கிளை நூலகத்தில் திரு. திரு. ஊ.மொ.அ. ரவூப் பி.ஏ., பி. டி., தலைமையில் வாசகர் வட்டத்தின் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. வாசகர் வட்டத்தின் தலைவராக திரு. எம். நடராசன் அவர்களும், துணைத்தலைவராக ஏ.கே.எஸ். மணியம் அவர்களும், நூலகர் திரு. பி. சண்முகம் செயலாளராகவும், திரு. எம். தம்பண முதலியார் பொருளாளராகவும், நிர்வாகக் குழு உறுப்பினர்களாக வித்துவான் க. சீனுவாசன், திரு. மைதீன், திரு. நடேசன், திரு. கு. இராசகோபாலன், திரு. சந்திரமெளலி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

படாளம்

படாளம் கிளை நூலகத்தில் ஊராட்சிமன்றத் தலைவர் திரு. பி.வி. வீராசாமி முதலியார் தலைமையில் 15-8-69 அன்று சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. திரு. பசுபதி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். நூலகர் திரு. வி. கந்தசாமி நன்றி நவின்று, இனிப்பு வழங்கினர். தேசீய கீதத்துடன் விழா இனிது முடிவுற்றது.

நூலக வட்டம்

நூலக வட்டத்தின் 10வது கூட்டம் சென்னை மாவட்ட மைய நூலகக் கருத்தரங்கு மண்டபத்தில் 9-8-69 இரண்டாவது சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடந்தது.

அப்போது ''எழுத்தாளர்எதிர்பார்க்கும் நூலகப்பணி'' என்ற தலைப்பில் திரு. அகிலன் அவர்கள் அரியதொரு உரையாற்றினர்:

மனிதர் ஒவ்வொருவரும் ஒரு தொழிலாளர். அம் முறையில் எழுத்தாளரும் நூலகரும் தொழிலாளர்களே. உலகத் தொழில் நன்ருய் நடக்க ஒருவரோடு ஒருவர் தொடர்புகொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும்.

பள்ளி, கல்லூரி, முதலிய முதநிலை கல்விநிலையங்களில் அடிப்படைக் கல்வி பெறுகிருேம். அந்தக் கல்வி மேலும் சிறப்புற உதவுவது நூலகங்கள்தான். அப்படிப்பயன் பெற்றவர்களில்—பிரிட்டிஷ் மியூசியம் நூலகத்தில் படித்துப்பயன் பெற்றுத்தான் பொதுவுடமைத் தந்தை கார்ல்மார்க்ஸ் ''முதலீடு'' என்ற நூலை உலகிற்குத்தந்தார். டார்வின் போன்ற பெரியோர்களும் இப்படித்தான் முன்னேறினர்.

நூலகம் ஒரு சக்தி வாய்ந்த இடம். அங்கு சக்தி சேகரிக்கப்பட்டு, வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கப்படுகிறது. சரியாகச் சொன்னுல் தேசியக் கவிஞர் பாரதியார் கூறியதுபோல நூலகம் அக்கினிக் குஞ்சுகளை—அறிவு ஆக்கத்தை உண்டாக்குமிடமாகும்.

நூலகங்களில் தொகுத்துவைக்கப்பட்டிருக்கும் சிந்தனையின் எழுச்சிதான் மனிதன் நிலவிலே காலடி வைக்க முடிந்தது. அங்கிருந்து அமெரிக்க ஜனதிபதி திரு. நிக்ஸனேடு பேசமுடிந்தது.

இத்தகு சக்தி வாய்ந்த நூலக இயக்கம் தமிழ்நாட்டிலும் 1950ல் சட்டபூர்வமாகத் தொடங்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் சுறுசுறுப்பாக வேலை நடந்தது. இப்போது சற்று மந்த நிலை காணப்படுகிறது. இந்த நிலை மாறவேண்டும்.

அதற்கு நூலகர்கள் பாடுபட முன்வரவேண்டும். பொழுது போக்காக படிக்க வருபவர்களுக்கு பொழுதுபோக்கு இலக்கியத்தைக் கொடுப்பதோடு நின்றுவிடாது, படித்து ருசி அறிந்த வாசகர்கள் மேலும் நல்ல முறையில் படிப்பதற்கு உதவி செய்ய முன்வரவேண்டும். அதற்காக மக்கள் என்னென்ன படிக்கிருர்கள் எனக் கணக்கெடுக்க வேண்டும். அதில் சினிமாக் கவர்ச்சி, அரசியல் ஆர்ப்பாட்டக் கவர்ச்சி போன்றவைகளை மெதுவாக மாற்றி மக்கள் அறிவு நூற்களைப் படிக்க நூலகர்கள் உதவ வேண்டும். அம்முறையிலே நூலகர்கள் பொது நலத் தொடர்பாளர்களாகப் பணியாற்ற வேண்டும்.

வாசகர் அரங்கு மாநில மாநாடு

சென்னையில் 1969 அக்டோபர் 19, 20 தேதிகளில் வாசகர் அரங்குகளின் மாநில மாநாடு நடைபெற இருக்கிறது. தமிழகம் முழுவதும் பொது நூலகங்களில் அமைக்கப் பெற்றுள்ள வாசகர் அரங்குகளின் சார்பில் பிரதிநிதிகளை இம்மாநாட்டிற்கு அனுப்ப நூலகர்கள் முன் முயற்சி எடுப்பதுடன், வாசகர் இயக்கப்

ஐந்தரை வயது எழுத்தாளர்

அந்தச் சிறுமிக்கு வயது $5\frac{1}{2}$. ஆனாலும் கற்பனை வேகம் அதிகம் அதன் விளைவு ஒரு புத்தகம். அதுவும் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும் கடற்கொள்ளைக்காரன் கதையை (The Pirates Tale) எழுதினாள். தன் தோழிகளுக்குப் படித்துக் காட்டினாள். அதை அவர்கள் வெகுவாக ரசித்தனர். இது புத்தகமாக வந்தால் நன்றாக இருக்குமே என்றாள் ஒரு சிறுமி.

உடனே எழுத்துப் பிரதி பிக்சர் பபின் பதிப்பகத்திற்குப்பறந்தது. பிரதியை படித்துப் பார்த்த திருமதி வெப் ஆச்சரியப்பட்டாள். அதை உடனே தங்கள் பபின் போஸ்ட் இதழில் வெளியிட்டாள். குழந்தைகள் படித்து மகிழ்ந்தனர். பாராட்டுக் கடிதங்கள் குவிந்தன. படங்களோடு புத்தகமாக வெளியிட வேண்டுமென்றும் சில வேண்டுகோள்கள் வந்தன.

சித்திரப் போட்டி வைக்கப் பட்டது. பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் தங்கள் கற்பனையைப் படமாக வடித்தனர். சிறந்தவை தேர்ந்தெடுக்கப்பட்டன.

இந்த முயற்சி இலக்கிய உலகிலே ஒரு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அதை விளக்கும் முறையில் 'டைம்ஸ்' இதழின் இலக்கிய நிருபர். அலெக்ஸ் ஹாமில்டன் 'பி பி சி புக்கேஸ்' விமர்சனத்தில் கூறியதாவது:-

எழுத்தாளர்களில் குட்டி எழுத்தாளர்—சின்னஞ்சிறு எழுத்தாளர் சிறுமி ஜேனட் தான். ஏனெனில் அவளுக்கு வயது இப்போது தான் $5\frac{1}{2}$.

ஒன்பது வயதில் 'இளம் பார்வையாளர்' என்ற நூலை எழுதிய டெஸ்சி ஆஸ்பர்ட்டை விட இச்சிறுமி $3\frac{1}{2}$ வயது சிறியவள்.

எட்டு வயதில் கவிதை நூலைச் செய்து முடித்த பிரெஞ்சுச் சிறுமி மினோ டிரட்டை விட $2\frac{1}{2}$ வயது சிறியவள். இப் புத்தக வெளியீட்டு வருவாயில் $5\frac{1}{2}$ சதவிகிதம் —அவள் $5\frac{1}{2}$ வயதில் எழுதியதை நினைவூட்டும் வகையில்-உரிமைப் பணம் அளிக்கப்படும்.

அத்தகு பெருமை மிக்க புத்தகம் வருகிற 1970ல் வெளிவரும். வெளியீட்டாளர் பெங்குவின் பதிப்பகத்தார் தான்! ○

பணியில் பங்கெடுத்துள்ள நூலகர்களும் பிரதிநிதிகளாக வரும்படி அழைக்கப்படுகிறார்கள்.

மாநாட்டிற்குப்பிரதிநிதிகளாக வரவிருப்பவர்கள் 5-10-69க்குள் தகவல் தரவேண்டும்.

இரண்டு தினங்கள் தங்கும் வசதியுடன் உணவு வசதியும் வேண்டுவோர் ரூ 8. பிரதிநிதிக் கட்டணமாக, திரு. அ. நச்சினார்க்கினியன், பொருளாளர், வாசகர் மாநாட்டுக் குழு, 82, பாண்டி பஜார், சென்னை-17 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மாநாட்டு மலருக்குக் கட்டுரைகளை அனுப்ப விரும்புவோர் 30-9-69க்குள் திரு. இராம. கண்ணப்பன், தலைவர், வாசகர் மாநாட்டு மலர்க்குழு, 3, லேடி மாதவன் நாயர் ரோடு, சென்னை-34 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

அன்புடன்
சித்திரபாரதி

புத்தக விமரிசனம்

மணக்கோலம்

கல்கி வெள்ளி விழாப்போட்டியில் மூன்றும் பரிசாக ரூ. 5000 பெற்ற நாவல் இது. இதன் ஆசிரியரான பி. வி. ஆர். ஏற்கனவே 1954இல் கலைமகள் நாவல் போட்டியிலும் பரிசு பெற்றவர். இன்னும் பல பரிசுகள் பெறக் கூடியவர்.

இவருடைய தொடர் கதைகள் பிரபல தமிழ்ப் பத்திரிகைகளில் தொடர்ந்து வெளியாகிக்கொண்டிருக்கின்றன. கதையில் உள்ள சுவாரஸ்யம் காரணமாகவே இவருக்கு இந்தவாய்ப்புக் கிட்டுகிறது என்று தோன்றுகிறது. மணக்கோலமும் கதை சுவாரஸ்யத்தோடு எழுதப்பட்டிருக்கிறது. சமூக நாவலான இதில் ஒரு துப்பறியும் கதையைப் படிக்கும் சுவாரஸ்யம் குன்றுவதில்லை. ஒரு விதவைத் தாயார் தன் மூன்று பெண்களை ஆளாக்கி அவர்களுக்கு மணமுடிக்கும்போது படும் அவஸ்தையை சித்தரிக்கிறது நாவல். அதனுல் எழும் பிரச்சனைகள் சமாளிக்கப்பட்டு கதை சுபமாக முடிவடைகிறது. இடை இடையில் வாசகனுக்கு ஜீரணமாகும் அளவுக்கு பிரச்னைகள் ஆராயப்படுகின்றன. சராசரி வாசகனை மனதில் கொண்டு பிரச்சனைகளின் ஆழத்திற்குப் போகாமல், ஆனுல் அவை பிரச்சனைகள் என்ற அளவில் ஆசிரியர் உணர்ந்திருப்பது தோன்ற அவை பேசப்படுகின்றன. வழக்கமான தமிழ் நாவலாக, சராசரித் தமிழ் சினிமாவின் கதை அமைப்பாக எல்லா நிகழ்ச்சிகளும் கடைசியில் ஒன்று சேர்க்கப்பட்டுக் கதை முடிவடைகிறது, இந்த நாவல் தமிழ் வாசகனுக்கு மிகவும் பிடிக்கும். அதற்கு வேண்டிய அம்சங்கள் எல்லாம் இருக்கின்றன. சப்புக் கொட்டிக் கொண்டு உட்கார்ந்த இடத்தில் இருந்து நிகழ்ச்சி விறுவிறுப்பால் ஆர்வம் மிகுந்து யானைபோல் இருப்புக் கொள்ளாமல் அசைந்து மூச்சு இளைழந்தோட இந்த நாவலை அவனுல் படிக்க முடியும். அந்த அளவில் மாபெரும் வெற்றி இந்த நாவல்.

மணக்கோலம், ஆசிரியர் : பி. வி. ஆர். வானதி பதிப்பகம்' தி. நகர், சென்னை-17. விலை ரூ, 7-50.

சந்தனத் திலகம்

இந்த சரித்திர நாவல் மலேசியாவின் பிரபல தினசரிப் பத்திரிகையான 'தமிழ் நேசன்' ஞாயிறு மலரில் தொடர்கதையாக வெளிவந்து அந்நாட்டுத் தமிழ் மக்களின் அமோகப் பாராட்டைப் பெற்றது.

பராந்தகன் என்ற சோழ மன்னன் பாண்டி நாட்டின் மேல் படையெடுத்து வென்று வாகை சூடினுன். பாண்டியன் இராஜசிம்மன் தோற்று தன் மணிமுடியோடு இலங்கைக்கு ஓடி அந்நாட்டு அரசன் காசிபனிடம் தஞ்சம் அடைந்தான். அவன் மணிமுடியோடு ஓடிய செய்தி தன் நாட்டு மக்களுக்கு வெறியூட்டும் அளவுக்கு அதை ரகசியமாக வைத்திருந்து,சரியான காலத்தில்

அதை வெளியிட்டு, மக்கள் இலங்கையின் மேல் படையெடுக்கக் கோபம் கொள்ளும் அளவுக்கு பயன்படுத்திக் கொண்டான் சோழன். பாண்டியரோடு நடந்த போரின் முடிவில், பாண்டிய அரசியை மானபங்கப்படுத்திக் கொன்றது தன் பலங்குன்றிய நேரத்தில் சோழனுக்குப் பேய்க்கனவாகவந்து வருத்திற்று. கடைசியில் அப்பேய்க் கனவு துரத்த, நகரின் எல்லையில் உள்ள துர்க்கையின் கோயிலுக்குள்ளாக ஓடி, கதவைத்தாழிட்டுக்கொண்டு சூலத்தில் மார்பைப் பாய்ச்சிக் கொண்டு, மார்பில் கழுவேறியது போலச் சாகிறான். இவனுக்கு நான்கு மக்கள். மூன்று ஆண்கள். ஒரு பெண். ஆண்களில் மூத்தவனை நீக்கி மற்ற இருவரின் (மூன்று) காதலியர், பெண்ணின் காதலன், தலைமறைவாக இருக்கும் பாண்டிய இளவரசன், சோழனின் அதிகாரிகளான இரு குறுநில மன்னர்கள் இவர்கள் முக்கிய கதாபாத்திரங்கள். குதிரையேற்றம், கப்பற்படை, ஆற்றைக் கடத்தல், கொள்ளிடக் கரை, பெண்ணின் தலையில் சந்தனச் சுமை, ஆடுமேய்ப்போன், அவன் அலக்கு நுனியில் பட்டயக் கொத்து சலங்கையாகத் தொங்குதல் இத்தனையும் நாவலுக்கு அழகு தருகின்றன.

ஆசிரியர், இருபதாம் நூற்றாண்டின் அரசியலில்நடந்தவைகளும், நடந்து கொண்டிருக்கின்றவைகளும் தந்த, தருகிற படிப்பினைகளை சோழனின் காலத்தில் ஏற்றிக் காண்பிக்கிறார். இன்று பெருமை யில்லாதவர்கள் பெருமையில்லாது வாழ முடியாத தவிப்பில், பக்கத்தில் இருப்பவனின் பெருமையைக் கண்டு மனம் புழுங்கி தன் பாட்டன் முப்பாட்டன் காலப் பெருமையைப் பேசி சமாதான மடைவது மனோதத்துவம் போலும். இழந்த காலத்தை நினைத்துப் பெருமைப் படுவது தமிழர்களின் மனோதத்துவம். இதை நன்றாக உணர்ந்திருக்கிறார் இந்நாவலாசிரியர். அதற்கு வேண்டிய எல்லா அம்சங்களையும் இந்நாவலில் சேர்த்திருக்கிறார். தமிழனின் அபிமான உணர்ச்சிகளுக்கு நாவலில் விருந்திருக்கிறது. தமிழனின் இன்றைய நிலை மாறுகிற வரையில், இன்று எழுதப்படுவது போன்ற சரித்திர நாவல்களுக்கு தமிழ் நாட்டில் அமோகமான மார்க்கட் இருக்கிறது. சராசரித் தமிழனின் நிலை உயர்ந்து, தன் நிலை கண்டு தானே பெருமை கொள்ளும் அந்தஸ்தும், புதுக்கண்டு பிடிப்புக்கள் அவனால் சாத்தியமாகி அவன் அந்தஸ்து உலகநிலையில் உயர்வதும் சாத்தியமாகிற போது வேறு விதமான சரித்திர நாவல்கள் தேவைப்படும். அது போன்ற நாவல்களை இவரால் எழுதமுடியும் என்பது இந்நாவலில் பல இடங்களில் தெரிவிக்கப் படுகின்றன. ஆனால், அப்படி ஒன்று அல்லது இரண்டு (அதற்கு மேல் எழுதுவது சாத்தியமல்ல) நல்ல நாவலுக்கே தேவையான விஷயங்களை தன்னுடைய சரித்திர நாவல்களில் எல்லாம் விரயமாக்கி யிருக்கிறார் என்றும் சொல்லத் தோன்றுகிறது. எப்படி யிருந்தாலும் தமிழனின் மனோதத்துவத்தை உணர்ந்து கதைப் போக்காலும் நிகழ்ச்சிச் சேர்க்கையாலும் அவனைக் குஷிப்படுத்தும் நாவலாக இதைப் படைத்திருக்கிறார். பாண்டி நாட்டுத் தமிழனாக இருந்தாலும் சோழநாட்டுத் தமிழனாக இருந்தாலும் இருவருடைய உணர்ச்சிகளும் புண்படாவகையில் ஒரிடத்தில் இல்லாவிட்டாலும் ஒரு இடத்தில் பெருமை கொள்ளும் வகையில் இந்நாவலை எழுதியிருக்கிறார். இந்நாவல் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் எதி

லும் தொடர்கதையாக வராத ஒன்ருகையால் சரித்திரக் கதைகள் படிப்பதில் ஆவல் உள்ள தமிழ் வாசகர்களால் விரைவில் வாங்கப்பட்டு சீக்கிரம் விற்றுத் தீர்ந்துவிடும்.

(சந்தனத் திலகம், ஆசிரியர்: ஜெகசிற்பியன், வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17. விலை ரூ. 7-50.

—கண்ணன்

கம்பர் தரும் இராமன் அருட் செல்வம்:

ஒரு மொழியில் உள்ள சொல்லுக்குப் பொருள் தரும் பொது அகராதி எந்த மொழியிலும் காணக் கூடியதே. ஒரு புலவர் கையாண்ட சொற்களைப் பற்றிய அகராதி, ஒரு நூலில் இடம் பெற்ற சொற்களைப் பற்றிய அகராதி; இலக்கியத்தில் உள்ள வரலாற்றுப் பெயர்கள் பற்றிய அகராதி, கதை உறுப்பினர்களைப் பற்றிய அகராதி, இலக்கிய அகராதி, பழமொழி அகராதி முதலிய பல்வேறு அகராதிகள் தமிழில் தோன்ற வேண்டும் என்று ஆங்கில மொழியில் வெளிவந்துள்ள அகராதிகளைக் கண்டு களித்தவர் விரும்பினர். அவரது விருப்பம் ஓரளவு நிறைவேறி வருகிறது எனலாம். இலக்கிய அகராதி, புலவர் அகராதி, திருக்குறள் சொல்லடைவு, பாட்டும் தொகையும் முதலிய தனிச்சிறப்புடைய அகராதிகள் பல அறிஞர் பெருமக்களின் அயரா உழைப்பால் உருவாகியுள்ளன. இந்த அகராதிக் கலைக்குத் தொடர்ந்து தொண்டாற்றி வருபவர் திரு. மு. சதாசிவம் எம். ஏ. அவர்கள். இதுவரை பத்து அகராதிகளை வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஒன்று 'கம்பர் தரும் இராமன் அருட் செல்வம்.'

தாய் தன் சேயிடம் கொண்ட அன்பினுல் அதைப் பல்வேறு பெயர்கள் இட்டு அழைக்கிருள். பல் நிறப் பூக்கள் பூத்துக் குலுங்கும் பொலிவு மிக்க காட்சியைக் காணும் இன்பம், இந்தச் செல்லப் பெயர்களைச் செவி மடுக்கையில் கிடைக்கிறது. தாய் ஒரு சேய்க்கு இவ்வளவு பெயர்கள் இட்டு அழைத்தால் ஒரு புலவன் தன் கதைத் தலைவனுக்கு எவ்வளவு பெயர்கள் இட்டு அழைப்பான் என்பதை எண்ணிப் பாருங்கள்.

கவிஞர்களில் சிறந்தவர் கம்பர்! காப்பியத் தலைவர்களில் உயர்ந்தவன் இராமன்! கவிச் சக்கரவர்த்தியான கம்பர் 'எண் வகை ஒருவற்கும் இமையவர்க்கும் இறைவன் தனக்கும் பல் பெரு முனிவர்க்கும் உயிருடன் தழீய அனைத்தினுக்கும் பரமான' இராமனை எந்தெந்தப் பெயர்களால் அழைக்கிருர் என்பதைத் தொகுத்து அகர வரிசையில் பொருளோடு அளித்துள்ளார், நூலாசிரியர். நூலின் முன்னே ஒரு பயனுள்ள முன்னுரையினையும், பின்னே 'கம்பர்கண்ட இராமன்' என்னும் சுவை மிகுந்த கட்டுரையினையும் தந்துள்ளார். இந்நூல், பக்தர்களுக்குப் பாராயண நூலாகவும், தமிழ் ஆராய்ச்சியாளர்க்கு ஒரு குறிப்பு நூலாகவும் (Reference book) பயன் படும் சிறப்பு மிக்கது.

கம்பர் தரும் இராமன் அருட் செல்வம். ஆசிரியர்: மு. சதாசிவம், எம். ஏ. விலை ரூ 3-50, பக்கம்: 171, கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.

—வே. தா. கோ.

அருவிச் சாரல்

திருநிறை. பத்மகுமாரி அவர்கள் எழுதிய தனித்தனிக் கவிதைகளின் தொகுப்பு நூல் இது. கவிதைத் துறையிலும் தற்கால மகளிர் ஆர்வம் காட்டி வருவதற்கு இந்நூல் ஒரு சான்று.

சிறந்த நோக்கோடு பிறந்த கவிதைகள்தாம் காலத்தை வெல்லும் தகுதியுடையன. நோக்கம் சிறக்காது போனல் பாட்டும் சிறக்காது.

மருந்தென மக்கள் நோயை
மாற்றிடக் கவிதை செய்தேன்

திருந்திட மக்கள் கூட்டம்
தீட்டினேன் புரட்சிப் பாடல்

என்னும் வரிகளில் இவரின் விழுமிய நோக்கம் வெளிப்படுகிறது.

'கைபுனைந்தியற்ருக் கவின் பெறு வனப்பு'டைய இயற்கைக்குக் கப்பம் கட்டுபவனே கவிஞன் என்கிருர் நேரு. இவரும் தென்றல், மலை, மேகங்கள், போன்ற இயற்கை இளவரசுகளுக்கும் 'அழகு' என்னும் இயற்கைப் பேரரசுக்கும் கவிதைக் கப்பம் கட்டத் தவறவில்லை.

தொல்காப்பியர் முதல் சுரதா வரை தமிழ் இலக்கியத்தில் ஆண்பாற் புலவர்கள் பெண்ணின் மன உணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுவதைப் படித்திருக்கிருேம். பெண்பாற் கவிஞரான இவர் ஓர் ஆணின் காதல் உணர்ச்சிகளை எடுத்துக் காட்டுவதை இவர் கவிதைகளில் கண்டு சுவைக்கலாம்.

மங்கும் ஒளிகுறை மாலையில்—
மந்த

மாருதம் கொஞ்ச மலர்ந்து
தேன்

பொங்கும் புதுமலர்
போன்றவுன்

புன்னகையின் பொருள்
— காதலோ?

என்பது காதலனுகி இவர் கேட்கும் கேள்வி.

இந்நூலில் 24-ம் பக்கத்திற்கடுத்து நாற்பதாம் பக்கம் தொடங்குகிறது. இடையிட்ட பக்கங்கள் முறைமாறி எங்கெங்கோ உள்ளதால் கவிதையிற் சுவை காணும் அவாவுடையாரன்றி வேறு யாரும் அந்தப் பக்கங்களைத் தேடிக் கொண்டிருக்க மாட்டார்கள். கவிதையைப் பொறுத்த மட்டில் தமிழ் நாட்டினர் காட்டும் 'அலட்சியம்' போதாதென்று கவிதை நூல் வெளியிடுவோரும்—கவனக் குறைவோடு இருக்க வேண்டுமா?

(அருவிச் சாரல்—ஆசிரியர்: தி. பத்மகுமாரி. வெளியிட்டோர்—அன்பு நிலையம். 131-பிராட்வே. சென்னை-1 பக்கம்-64. விலை-1-25.)

ஓர் இதயத்தின் ஏக்கம்

'பனி மலர்க் கவிஞர்' பொன்னடியான் அவர்கள் இக்குறுங் காவியப் படைப்பில், காதல் நிறைவேருத நிலையில் 'பனிப் புயலிற் சிக்குண்ட பறவை யானேம்' என்று பாடும் இரண்டு இதயங்களின் ஏக்கத்தை வெளியிடுகிருர். எனினும் இந்நூலுக்கேனே 'ஓர் இதயத்தின் ஏக்கம்' என்றே பெயரிட்டுள்ளார்?

வேற்றூர்க்குப் போயிருக்கும் காதலிக்கு விதிர் விதிர்த்துப் போயிருக்கும் தன் நிலையை எல்லாம் விளக்கிக் கடிதம் எழுதுகிருன் இக்காவியத் தலைவனன கவிஞன். அதற்கவள் எழுதும்

மறுமடலில் பெற்ருேர் செய் திருக்கும் திருமண ஏற்பாட்டை யும், தான் தாண்டி வரமுடியாத படி தடுத்து நிறுத்தும் சாதிக் கட்டுப்பாட்டையும் குறித்து கண்ணீரில் தோய்த்தொரு கவிதை மடல் எழுதுகிருள். அக் கடிதத்தில் காதல் தோல்வியைத் தாங்க முடியாத தன் தவிப்பை யும் கொட்டித் தீர்த்து விடு கிருள். இந்த நூலிலேயே இந் தப் பகுதி தான் அந்தப் பெண் ணுக்காக நம்மைக் கண்ணீர் சிந்த வைக்கிறது. காதலிக்கத் தெரிந்த நமக்கு, அக்காதலேக் காப்பாற்றத் தெரியவில்லேயே என்று கவலேப்படும் அவள், காத லனேத்-தன்னே வாழ்த்து மாறு வேண்டுகிருள்.

'கரம்பற்றப் போகின்ற
கணவரோடு

கற்புமக ளாய்வாழ அருள்தா
ருங்கள்

என்றவள் வேண்டும் போது கண்ணகியின் கால் வழியில் வந்த தமிழ்ப் பெண்ணின் கற்புத்திறம் கண்டு மகிழ்கிருேம். மேலும் அம்மடலில் விரைவில் தன் காத லனே மணம் பெற்று வாழச் சொல்லு மவள்,

தமிழ்க்கடலே...

மனேவியுடன் குழந்தையுடன்
ஒருநாள் என்றன்

மனேதேடி விருந்திற்கு
வரத்தான் வேண்டும்.

கனிச்சாறும் அக்குழந்தை
கன்னத்தில் நான்

கணக்கின்றி முத்தங்கள்
பொழிய வேண்டும்.

என்று எழுதும்போது அவள் காதல் தோல்வியை மாற்றிக் கொண்டதாகவும், மனத்தைத் தேற்றிக் கொண்டதாகவும் காட் டிக் கொள்ள எப்படியெப்படி யெல்லாம் முயல்கிருள் என்பதை யெண்ணி நெஞ்சு நெகிழ் கிருேம்.

நூலெங்கும் அங்கிங்கெனுத படி உவமைகளே அள்ளித் தெளிக் கிருர் கவிஞர்.

புகைச் சுருட்டால் பழுத்துவிட்ட
கிழவன் மீசை

போல், பழுத்த உணர்வுகளோ
முகத்தில் தேங்க

என்று பழுத்த உணர்வுகளுக் குக் கிழவன் மீசையை உவமிக் கும் இவர் அந்தக் கிழவன் மீசை புகைச் சுருட்டால் பழுத்த தெனக் காரணமும் காட்டி விடு கிருர். இதனுல் தன் கவித்திறத் தையும் நிலே நாட்டி விடுகிருர்.

பாரதிதாசன் காணும் நாட் டில் கல்வி நல்காக் கசடர்க்குத் தான் தூக்குமரம் உண்டு. தன் பாட்டிலோ தூய தமிழ்க் காத லுக்கும் கலப்பு மணத்துக்கும் தடையாய் நிற்போருக்குத் தூக்குமரமுண்டு (பக் 42)

இந்த ஒரு பாட்டிலேயே இவர் பல்வேறு உணர்ச்சிகளேத் தேக்கிக் காட்டி விடுகிருர். என்ருலும் வேறு சில யாப்புகளேப் பயன் படுத்திப் பாடியிருந்தால் இன்னும் அதிகச் சுவையில் நம்மை ஆழ்த்தியிருப்பாரோ என்னவோ?

(ஆசிரியர். கவிஞர். பொன் னடியான். வெளியிட்டோர். இந்திரா பதிப்பகம், 9, புதுத் தாண்டவராய முதலி தெரு, சென்னே-7, பக்கம் 48. விலே ரூ. 1-50.)

—சேந்தி உடையநாதபுரம் சீனிவாசன்.

புதிய புத்தகங்கள்

643. மண்ணில் தெரியுது வானம் O—, 3N ,M K9

ஆசிரியர்: ந. சிதம்பர சுப்பிரமணியன், வெளியீடு: புக்வென்சர் வாசகர் வட்டம், சென்னை-17. மே 1969. பக்கம்: 354, விலை: ரூ. 7–50. வகை: நாவல்.

644. ஓடிவந்த பையன் O—. 3N 28, O K7

ஆசிரியர்: பூவை எஸ். ஆறுமுகம். வெளியீடு: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை–14. 1967. விலை: ரூ. 1-25. வகை: குழந்தை இலக்கியம்-கதை.

645. குறளும் குழந்தையும் O—, 3N 36,K K7

ஆசிரியர்: சொர்ணம். வெளியீடு: அன்பு நிலையம், சென்னை-1. ஏப்ரல் 1967. பக்கம்: 144. விலை: ரூ. 2–25. வகை: குழந்தை இலக்கியம்—சிறுகதைத் தொகுப்பு.

646. மூவர் தமிழ் O—, 1x K9

ஆசிரியர்: சு. அருணாசலம் முதலியோர். வெளியீடு: அசோகன் பதிப்பகம், சென்னை-17. 1969. பக்கம்: 32 விலை: ரூ. 0-50. வகை: கவிதை.

647. சிரிப்புப் படம் வரைவது எப்படி ? M —K9

ஆசிரியர்: ''சுதர்ஸன்'' வெளியீடு: டி. சக்கரபாணி, ஹாஹா நிலையம், 231, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-3. பதி. 2. 1969. பக்கம்: 24. விலை: ரூ. 1–00. வகை: பயன் கலைகள்

648. திருவாசகம் Q23 : 417 x5, 1 —K9

உரையாசிரியர்: ப. இராமநாதபிள்ளை. வெளியீடு: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட். சென்னை-1. 1969. பக்கம்: 432. விலை: ரூ. 3–75. வகை: சைவசமயம்.

649. அமெரிக்க காந்தி Y73 (S76) y7N29 —K8

ஆசிரியர்: மா. சண்முக சுப்பிரமணியம். வெளியீடு: கழகம், சென்னை-1. நவம்பர் 1968. பக்கம்: 96. விலை! ரூ. 3-00 வகை: அமெரிக்க சமூக—வாழ்க்கை வரலாறு.

650. பிஞ்ச்சியோ O—, 3 K5

மொழிபெயர்ப்பாசிரியர்: ப. மோஹன். வெளியீடு: இந்தியா புக் ஹவுஸ், பம்பாய். ஜூலை 1965. பக்கம்: 32 விலை: ரூ. 0-75 வகை: சிறுவர் சித்திர கதை

651. வளைக்கரம் O—, 3N 25, V K9,

ஆசிரியர்: ராஜம் கிருஷ்ணன், வெளியீடு: தமிழ் உறவு (தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்) 8, சின்ன ரெட்டித் தெரு, எழும்பூர், சென்னை-8. மே, 1969. பக்கம்: 728. விலை: ரூ. 14-00. வகை: நாவல்

652. வைர மூக்குத்தி O—, 2N ,V wl K9

ஆசிரியர்: ஆலந்தூர் கோ. மோகனரங்கன். வெளியீடு: வசந்தா பதிப்பகம் 605, முத்துக்குமாரசாமி சாலை, ஆலந்தூர், சென்னை-16. விற்பனை உரிமை: பாரி நிலையம், சென்னை-1. ஜூலை 1969. பக்கம்: 76. விலை: 1-50. வகை: கவிதை நாடகம்

653. மொழி முத்தம் O—, 1x K9

ஆசிரியர்: கலாசிகாமணி கம்பதாசன். வெளியீடு: கிடைக்குமிடம்: மல்லிகைப் பதிப்பகம், தி. நகர், சென்னை-17. மார்ச், 1969. பக்கம்: 24. வகை: கவிதை.

654. நடேசன் என் நண்பன் O—, 3N 322, N K9

ஆசிரியர்: புவனை கலைச்செழியன், வெளியீடு: குழந்தை இலக்கியக் கழகம், சென்னை-1. விற்பனை உரிமை: மனோன்மணி புத்தக நிலையம், சென்னை-1. ஜூலை 1969. பக்கம்: 122. விலை: ரூ. 2-50. வகை: சிறுவர் இலக்கியம்-கதை

655. சோமசர்மா வருகிறார் O—, 3N KA1, S K8

ஆசிரியர்: கைலாஸ். வெளியீடு: பூங்கொடிப் பதிப்பகம், 30 முண்டக்கண்ணியம்மன் கோவில் தெரு, மைலாப்பூர், சென்னை-4. மே, 1968. பக்கம்: 64. விலை: ரூ. 1-25. வகை: சிறுவர் இலக்கியம்-கதை

656. ஊமை நெஞ்சம் O—, 3N SOR, U K9

ஆசிரியர்: சொர்ணம். வெளியீடு: பூங்கொடிப் பதிப்பகம், சென்னை-4. ஜுன் 1969. பக்கம்: 230. விலை: ரூ. 4-50. வகை: கதை.

Edited by: KUYILAN (G. Ramalingam)
and Printed by Kondah. Kasi. Seetharamon at Sree Agastya Printers
85, III Main Road, C.I. T.Nagar (Ext.) Madras-35
For the Publishers "Bibliopole"
14, Thanikachalam chetty Road: Madras-17.